# பால்நிலைச் சமத்துவத்திற்கான பெண்ணிய அணுகுமுறைகளை ஆராய்தல் பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கை செயற்றிட்டத்தில் இருந்து பெற்ற அனுபவங்கள்



காலி மாவட்டத்தில் மகளிர் நிலையத்தில் அர்ப்பணிப்புமிக்க பணியாளர்களும் இரண்டாம் நிலைத் தலைமைத்துவமும்.

பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கை, செயற்றிட்டமானது, 2019 முதல் 2023 வரையான நான்கு வருடங்களில் பெண்களின் சகல பல்வகைமைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி 60 இற்கும் மேற்பட்ட மகளிர் உரிமைகள் அமைப்புக்களுடன் பணியாற்றியுள்ளது. பெண்களின் வலுவூட்டலுக்கான மற்றும் பால்நிலைச் சமத்துவத்திற்கான பெண்ணிய அணுகுமுறைகளை வலுப்படுத்துவதே செயற்றிட்டத்தின் அடிப்படையான அணுகுமுறையாகும். மாற்றத்திற்கான பெண்களின் வலுவூட்டல் எனும் இறுதி இலக்கினைச் சுற்றிப் பின்னப்பட்டு, பெண்களின் பால்நிலையாக்கப்பட்ட வகிபாத்திரங்களில், பொறுப்புக்களில், வளங்களுக்கான அணுகலில் மற்றும் அதன் கட்டுப்பாடுகளில், தீர்மானம் வகுத்தலில் மற்றும் இறுதியில் இலங்கையில் பெண்களின் வாழ்வில் பெண்களின வலுவிழந்த நிலையை அடையாளம் காண்பதிலும் புரிந்துகொள்வதிலும் செயற்றிட்டம் பால்நிலைச் சமத்துவ அணுகுமுறையினை பயன்படுத்தியது.

கனடாவின் பெண்ணியச் சர்வதேச உதவிக் கொள்கையின் வலுவான வழிகாட்டலுடனும், வெளிநாட்டுக் கொள்கை ஆவணத்தின் ஒரு புதிய மற்றும் புத்தாக்கமிக்க சமர்ப்பணத்துடனும், அபிவிருத்தி பற்றிய மற்றும் பெண்களின் உரிமைகள் பற்றிய நிகழ்ச்சித்திட்ட உருவாக்கம் ஆகியவற்றுக்கு இலங்கையில் பெண்ணிய அணுகுமுறை எவ்வாறு செயற்பட்டுள்ளது என்பதை ஆராயும் பணியினை பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை , செயற்றிட்டமானது ஏற்று நடைமுறைப்படுத்தியுள்ளது. வலுவூட்டல் பற்றிய சித்தாந்தம் தொடர்பான ஆரம்ப ஆய்வு, மகளிர் உரிமைகள் அமைப்புக்களால் வெளிப்படையாகவும் பொதுவாக மறைமுகமாகவும் பின்பற்றப்பட்டு அளப்பரிய நுழைபுலங்களை வழங்கியுள்ளது. பெண்ணியம் பற்றிய தவறான கருத்தியல்களின் காரணத்தினால், மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் அவற்றினை ஆரம்பத்தில் 'பெண்ணிய அமைப்புக்கள்' என அழைப்பதற்குத்

தயங்கின. ஆனால், மகளிர் உரிமைகளுக்கான அமைப்புக்கள் எவ்வாறு பணியாற்றுகின்றன என்பதை ஆராய்கையில், அவ்வாறான அமைப்புக்கள் உண்மையிலேயே பெண்ணியப் பணிகளையே மேற்கொள்கின்றன மற்றும் அவை பெண்ணிய அணுகுமுறைகளையே பின்பற்றுகின்றன என்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

## பெண்ணிய அணுகுமுறைகளை இயலுமாக்கல்

மகளிர் உரிமைகள் பற்றிய பணிகளுக்கான பெண்ணிய அணுகுமுறைகள் இலங்கைக்கு ஒன்றும் புதியனவல்ல எனும் பூரணமான புரிதல்மிக்க வலுவான எண்ணக்கருவுடனேயே பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை, செயற்றிட்டமானது பணியாற்றியது. பெண்களின் வலுவூட்டலுக்கான பெண்ணிய அணுகுமுறைகளை நேரடியாக அடையாளம் காணும் கருத்தியல் அதன் கோட்பாட்டு ரீதியான கருத்தியலாக்கத்தில் புதியதாக இருந்தாலும், இலங்கையில் பெண்ணியவாதிகளினால் முன்னின்று நடத்தப்பட்ட மகளிர் உரிமைகள் அமைப்புக்களும் மகளிர் இயக்கங்களும் கடந்த எட்டு தசாப்தங்களுக்கும் மேலாகப் பெண்ணிய அணுகுமுறைகளையே எடுத்துள்ளன மற்றும் தொடர்ந்தும் எடுத்து வருகின்றன. "மகளிர் உரிமைகளை மேம்படுத்துவதில் எவரேனும் ஒருவர் வேறு எவ்வாறு செயற்படலாம்" என்பதே நாம் எப்போதும் எழுப்பிய வினாவாகும்.

இலங்கையில் பெண்களின் வலுவூட்டலுக்கான கூட்டு இலக்கினை நோக்கிப் பணியாற்றுவதற்காகப் பெண்கள் தம்மைக் குழுக்களாக அமைத்துக் கொள்ளும் வரலாறு வாக்குரிமைக்கும் சுதந்திரத்திற்குமான பெண்களின் போராட்டத்துடன் பல தசாப்த கால நீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ளது. பெண்கள் குழுக்களை உருவாக்கி அபிவிருத்திச் சொல்லாடலில் ஒரு பகுதியாக மாறுதல் என்பது, உபாயமார்க்கங்கள் மற்றும் கவனக்குவிப்புக்களில் மாற்றங்களுடனும் மாறுபடும் மட்டங்களிலான பங்கேற்பு மற்றும் நிலைமைகளுடனும் வரலாறு நெடுகிலும் மாற்றமடைந்துள்ளது. கடந்த காலங்களில், மகளிர் இயக்கம் பெண்ணியச் செயற்பாடுகளுடன், மகளிர் உரிமைகளுக்கான ஆதரித்துவாதாடல் மற்றும் ஆதரவுதிரட்டலுடன் அவர்களுக்கான பரந்த வீச்சிலான உரிமைகளை வென்று உறுதியாக வளர்ச்சியடைந்துள்ளது. பெண்ணியச் சொல்லாடலில் பெருவாரியானவை உள்நாட்டுப் மகளிர் உரிமைகள் அமைப்புக்களின் சிறிய விகிதாசாரத்திற்குப் பொசிந்து தேசிய மட்டங்களில் செறிந்திருந்தன. மகளிர் உரிமைகள் அமைப்புக்களில் பல பெண் உரிமைகள் தொடர்பில் பணியாற்றின என்றாலும் தம்மைப் பெண்ணிய அணுகுமுறைகளை எடுக்கும் மகளிர் அமைப்புக்கள் என அடையாளம் காண மறுத்துவிட்டன. இப் பின்புலத்திலேயே, பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கை, செயற்றிட்டமானது அதிகமான சமுதாய மட்ட மகளிர் அமைப்புக்களுடன் பணியாற்ற ஆரம்பித்தது.

பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம - இலங்கை செயற்றிட்டத்துடன் பங்காண்மை அமைக்கும் அமைப்புக்களின் ஆரம்ப இயலளவு மதிப்பீட்டில், இயலளவு உருவாக்கம் தமக்குத் தேவைப்படும் பரப்புக்களை மகளிர் அமைப்புக்கள் தாமே அடையாளம் கண்டன. பல பங்காளர்கள் அவர்களின் நிகழ்ச்சித்திட்ட உருவாக்கத்தில் உரிமைகள் - அடிப்படையிலான சட்டகத்தினைப் பயன்படுத்தி, பால்நிலைச் சமத்துவத்தினை அவற்றின் பணியின் மையப் பகுதியில் நிலைப்படுத்தின எனக் கண்டறிந்தவைகள் சுட்டிக்காட்டிய அதேவேளை, மகளிர் உரிமைகள், பால்நிலை மற்றும் மிக முக்கியமாகப் பெண்ணியம் ஆகியவற்றுக்கான பல்வேறு கருத்தியல்களையும் அணுகுமுறைகளையும் புரிந்துகொள்வதில் இன்னும் நிச்சயமின்மை காணப்பட்டது. கருத்தியல் ரீதியான தெளிவுக்கான, கருத்தியல் சட்டகங்களுக்கான அபிவிருத்தி பற்றிய ஆழமான புரிதலுக்கான தேவையினையும் பால்நிலை மற்றும் பால்நிலை தொடர்பான பிரச்சினை தொடர்பான அணுகுமுறை மற்றும் கோட்பாடுகள் பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவுக்கான தேவையினை மதிப்பீடு அடையாளம் கண்டது. மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் பெண்களுடன் பணியாற்றுவதற்காக அவற்றுக்குப் பெண்ணிய அணுகுமுறைகள் பற்றிய இயலளவும் தொழில்நுட்ப அறிவும் வழங்கப்பட வேண்டும் என மதிப்பீடு பரிந்துரைத்தது.



அடிப்படைப் பெண்ணியக் கோட்பாடுகளைத் தழுவிக்கொண்ட பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டமும் அதன் பங்காளர்களும், சமத்துவத்தினை மேம்படுத்துவதற்கும், பால்நிலை இடைவெளியினை இல்லாதொழிப்பதற்கும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் சமநிலையான அதிகார விநியோகத்தினைப் போஷிப்பதற்கும் அரும்பாடுபடுபட்டன.

இதனை அடிப்படையாகக் கொண்டு, பெண்ணியக் கருத்தியல்கள் மற்றும் அணுகுமுறைகளுக்கான அறிமுகம் பற்றிய மூன்று பகுதிகளடங்கிய பயிற்சியொன்றினை பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டம் உருவாக்கியது. நாட்டின் உள்ளூர் மொழிகளில் (சிங்களம் மற்றும் தமிழ்) அமைந்திருந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், அபிவிருத்திப் பணிகளுக்கான பெண்ணிய அணுகுமுறை பற்றிய புரிதலையும் அறிவினையும் தெளிவினையும் அதிகரிக்கும் அடிப்படை நோக்கங்களுடனும் செயற்றிட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டச் சுற்றுக்களில் பெண்ணிய அணுகுமுறைகளைப் பிரயோகிப்பதற்கான திறன்களை அதிகரிக்கும் அடிப்படை நோக்கத்துடனும் பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டத்தினால் வடிவமைக்கப்பட்டது.

இலங்கையின் பெண்ணியச் செயற்பாட்டாளர்கள் மற்றும் கோட்பாட்டாளர்களின் உதவியுடன் ஆசிய மன்றத்தின், பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டம தொடர்ச்சியாக மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் உண்மையிலேயே பெண்ணியப் பணிகளையே நிறைவேற்றுகின்றன எனும் புரிதலை அவர்கள் மத்தியில் ஏற்படுத்த அவற்றின் இயலளவினை வலுப்படுத்தியது.

பால்நிலைக் கூருணர்வுமிக்க நிகழ்ச்சித்திட்ட உருவாக்கம் மற்றும் பெண்ணிய நிகழ்ச்சித்திட்ட உருவாக்கம் ஆகியவற்றுக்கு இடையிலான வித்தியாசம் பற்றிய புரிதலை வழங்குவதே இயலளவு உருவாக்கத்தின் அடிப்படை அணுகுமுறைகளில் ஒன்றாகும். மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் அவை எடுத்துவந்த மகளிர் வலுவூட்டலுக்கான அணுகுமுறைகள் பற்றித் திறனாய்வுடன் சிந்திப்பதற்கு முற்பட்டதுடன் "பால்நிலைக் கூருணர்வுமிக்க நிகழ்ச்சித்திட்ட உருவாக்கம் என்பது, எமது பணிகளை நிறைவேற்றும் அதேவேளை, சமுதாயத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான வெவ்வேறு உரிமைகள், வகிபாத்திரங்கள் மற்றும் பொறுப்புக்களையும் அவர்களுக்கு இடையிலான உறவுகளையும் ஏற்றுக்கொள்வதற்காகச் சமூக - கலாசார நியமங்கள் மற்றும் பாகுபாட்டினைப் புரிந்துகொண்டு அதனைக் கருத்திற்கொள்ளுதல்" என எடுத்து விளக்கின.

"பெண்ணிய நிகழ்ச்சித்திட்ட உருவாக்கம் என்பது பால்நிலைக் கூருணர்வுமிக்க நிகழ்ச்சித்திட்ட உருவாக்கத்தினை மேற்கொள்வது ஆனால் பெண்களுக்கான சமத்துவத்தினையும் பால்நிலை நிலைமாற்றமிக்க மாற்றத்தினையும் மேம்படுத்தும் இறுதி நோக்கத்துடன், பால்நிலைக் கூருணர்வுமிக்க நிகழ்ச்சித்திட்ட உருவாக்கத்தினை மேற்கொள்கையில் நாம் காண்கின்ற சகல இடைவெளிகளையும் அகற்றுவதற்காக இன்னும் ஒரு படி மேலே செல்வது" என மகளிர் அமைப்புக்கள் விளக்கின.



பால்நிலைப் பெரும்போக்காக்கம் மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றின் மீது கவனம் குவித்து பால்நிலைக் கூருணர்வுமிக்க முன்னெடுப்புக்களை அமுல்படுத்துவதில் தேர்ச்சியாக இருக்கும் அதேவேளை, பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டத்தின் கீழ், பங்காளர் அமைப்புக்கள் பால்நிலைக் கூருணர்வுமிக்க நிகழ்ச்சித்திட்ட உருவாக்கத்தில் இருந்து பெண்ணிய நிகழ்ச்சித்திட்ட உருவாக்கத்திற்கு இடைமாறுவதற்கு வழிகாட்டப்பட்டன. பெண்ணிய நிகழ்ச்சித்திட்ட உருவாக்கம் பற்றிய மேம்பட்ட புரிதலின் காரணமாக, அதிகார உறவுகளைச் சவாலுக்குட்படுத்துவதன், பால்நிலை வகிபாத்திரங்கள் பற்றிய ஊகங்களைக் கேள்வி கேட்பதன், உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறைக்கு இயைபுறுவதன் முக்கியத்துவத்தினைப் புரிந்துகொண்டன. நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதன், புரிதலைப் போஷிப்பதன், சுய விழிப்புணர்வினை மேம்படுத்துவதன், மனப்பாங்குகளை மாற்றுவதன், பெண்ணிய அணுகுமுறையுடன் இயைபுறுவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களுக்காகச் சிக்கல்மிக்க நிலைமாற்றமிக்க மாற்றங்களை அளப்பதன் முக்கியத்துவத்தினை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்ட யுகசக்தி பெண்கள் சம்மேளனத்தின் அர்ப்பணிப்புமிக்க பணியாளர்களே இப்புகைப்படத்தில் உள்ளனர்.

குடும்பங்களிலும் சமுதாயத்திலும் வேலைத்தளங்களிலும் அரசியல் செயன்முறைகளிலும் பொருளாதாரத்திலும் பெண்கள் வகிக்கும் வகிபாத்திரத்தினைப் புரிந்துகொண்டு, பெண்களின் பல்வகைமைமிக்க குழுக்கள் மீதும் வளங்களுக்கான அவர்களின் அணுகல் மற்றும் வளங்களுக்கான அவர்களின் கட்டுப்பாட்டின் மீதும் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புக்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பரீட்சிப்பதற்காகவும் அதிகாரச் சமனிலையின்மைகளைக் குறைப்பதற்காகப் பாடுபடுவதற்காகப் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு இடையில் அதிகாரச் சமனிலையின்மையினை அடையாளம் காண்பதற்காகவும் மகளிர் அமைப்புக்கள் அவற்றின் பணிகளில் பால்நிலை அடிப்படையிலான பகுப்பாய்வின் பயன்பாட்டினைச் சீரமைப்பதற்கு அவற்றுக்கு உதவி வழங்கப்பட்டன.

பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டல் கருத்தியல்களைத் திறனாய்வுடன் மதிப்பிடுவதையும் பெண்களை அடக்குவதற்கு இட்டுச்செல்லும் பால்நிலைச் சமத்துவமின்மைகளைத் தூண்டிவிடும் அதிகாரச் சமனிலையின்மைகளை அகற்றுவதற்கான இன்றியமையாத தேவையினையும், பெண்ணியம் மற்றும் பால்நிலைச் சமத்துவத்திற்கு இடையிலான இணைப்பினையும் பங்காளர்களுக்கு நினைவூட்டுவதற்கும் மற்றும் வேலைச் சூழலில் புலப்படுகின்ற கோட்பாடுகள், கருத்தியல்கள் மற்றும் கடப்பாடுகளை நினைவூட்டுவதற்கும் உபாயமார்க்கமிக்க இயலளவு உருவாக்க இடையீடுகளை வழங்குவதற்கு பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை , செயற்றிட்டமானது தொடர்ச்சியாக பாடுபட்டது.

மகளிர் உரிமைகள் அமைப்புக்களுடன் பணியாற்றிய கடந்த நான்கு வருடங்களில், பெண்களின் வலுவூட்டல் தொடர்பாகப் பணியாற்றுவதற்கு இந்த அமைப்புக்கள் உண்மையிலேயே பெண்ணிய அணுகுமுறையினை எடுத்திருந்தன என்பதைப் பெருமையுடன் ஏற்றுக்கொண்டதை பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை , செயற்றிட்டம் கண்டது. இவற்றின் பெண்ணிய அணுகுமுறையில், ஆண்களைப் போன்ற அதே மட்டத்தில் பெண்களுக்கும் சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்காக பால்நிலை அடிப்படையிலான வித்தியாசத்தினையும் பாகுபாட்டினையும் அகற்றுவதற்காகப் பெண்களை வலுவூட்டுவதற்கு மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் அரும்பாடுபட்டன. பெண்களையும் பெண்களாகத் தம்மை அடையாளம் காண்பவர்களையும் அடக்குமுறைக்கு உள்ளாக்குவதைப் புரிந்துகொள்வதிலும் ஏனைய பல்வகைமைகளின் மத்தியில் இனத்துவம், சமயம், பாலியல் நாட்டம், வயது, வகுப்பு, வருமான மட்டங்கள், வதிவிடம் ஆகியவற்றின் பல்வகைமைமிக்க இடைவெட்டும்தன்மையினைக் கொண்டுவருவதிலும் பால்நிலையிலும் பால்நிலை வித்தியாசங்களிலும் அமைப்புக்கள் கவனம் செலுத்தின.

### பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கை செயற்றிட்டத்தினால் உதவி வழங்கப்பட்ட பங்காளர் மகளிர் உரிமைகள் அமைப்புக்களால் ஆற்றப்பட்ட பணிகளில் எது பெண்ணியமிக்கதாகும்?

பெண்களின் பல்வேறு விதமான பிரச்சினைகள் தொடர்பாகச் சமுதாய மட்டத்தில் பணியாற்றுகையில், பெண்களின் வலுவூட்டலுக்குத் தம்மை இட்டுச்செல்லும் என்ற எதிர்பார்ப்புடன் மகளிர் உரிமை அமைப்புக்கள் ஏன் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகின்றன என நோக்கி, தமது பணிகளையும் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் வகைகளையும் அவை எவ்வாறு நடத்தப்படுகின்றன என்பதையும் அவை யாரை இலக்குவைக்கின்றன என்பதையும் அந்தப் பணிகள் உருவாக்குகின்ற சாதகமான மற்றும் நிலைமாற்றமிக்க மாற்றங்களால் யார் பயனடைகின்றனர் என்பதையும் திறனாய்வுடன் மீளாய்வு செய்யுமாறு மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் அடிக்கடி ஊக்குவிக்கப்பட்டன.

செயற்றிட்டத்தின் பல்வேறு கட்டங்களில் ஆராயும் பெறுபேறுகள் மேற்கொள்ளப்பட்டன. மகளிர் அமைப்புக்கள் அவற்றின் சொந்தப் பணிகளைத் திறனாய்வுடன் மீளாய்வு செய்வதற்கும் திருத்தங்கள் மற்றும் மாற்றத்திற்கான தளத்திற்கும் இது அவற்றினை இயலுமாக்கியது. திறனாய்வுமிக்க இந்தச் சுய பகுப்பாய்வினை வினாக்களுடன் பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கை செயற்றிட்டம் ஊக்குவித்தது.

ஏன் என்பதற்கு மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் வழங்கிய ஆரம்ப பதில்களில் "அறிவினை வழங்குவதற்கு", "மாற்றத்தினை உருவாக்குவதற்கு", உரிமைகள் பற்றிய "விழிப்புணர்வினை உருவாக்குவதற்கு" போன்ற காரணங்கள் உள்ளடங்கியிருந்தன. ஆனால், தாம் "பெண்களின் உரிமைகளைப் பற்றிப்பிடிக்கவே" பணியாற்றுவதாக மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் இறுதியில் ஏற்றுக்கொள்வதற்குக் கலந்துரையாடலும் ஆராய்வுகளும் வழியேற்படுத்தின

இன்னும், தாம் பெண்ணியப் பணிகளையே மேற்கொள்வதாகத் தெளிவாக எடுத்துக்கூறுவதற்கு மகளிர் அமைப்புக்கள் தொடர்ந்தும் தயக்கம் காட்டிவந்ததுடன் பெண்ணியவாதியாக இருந்துகொண்டு 'பால்நிலைச் சமத்துவத்தினை' வெளிப்படையாகவே அடைதலையும் தாம் ஆற்றும் பணியினையும் இணைப்பதற்கு அமைப்புக்கள் கஷ்டப்படுவதைக் காண முடிந்தது. தாம் 'பால்நிலைச் சமத்துவப்' பணிகளை ஆற்றுவதைச் சமூகம் ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்ட சில அமைப்புக்கள் நாம் அதனைப் பெண்ணியம் என அழைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருந்ததுடன் பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கை ,செயற்றிட்டத்திடமிருந்து பதில்களைக் கோரின. 'பெண்ணியம்' என்றால் உண்மையிலேயே என்ன என்பது பற்றிய விழிப்புணர்வின்மை இதற்கான பிரதான காரணமாக இருக்கலாம் அல்லது 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் பெண்ணிய அணுகுமுறைகள் அவற்றின் வேர்களை வன்முறை மிக்க எதிர்ப்புக்களில் கொண்டிருந்திருக்கலாம் மேலும் தற்போது நிலவும் செயற்பாட்டுச் சூழலில் உரிமைகளை அடைவதற்கு மகளிர் உரிமை அமைப்புக்கள் தம்மை வன்முறையுடன் தொடர்புறுத்துவதற்குத் தயக்கம் கொண்டிருந்தன எனும் சிந்தனையினை பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டம் தூண்டியது. மகளிர் உரிமைகளுக்கான போராட்டம் இயங்குவதற்கென பல முறைகளைக் கொண்டுள்ளது என்பதையும் அந்த முறைகள் எல்லாமே வன்முறைமிக்கவையல்ல என்பதையும் மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் ஏற்றுக்கொண்டாலும், பெண்ணியம் என்பது மேற்கத்தேய சித்தாந்தம் என்கின்ற விடயம் எனவும் அது இலங்கை போன்ற நாடுகளுக்கு பொருத்தமற்றது என்கின்ற தவறான கருத்தியலே அமைப்புக்களின் தயக்கங்களுக்குக் காரணமாக இருக்கலாம். ஆணாதிக்கத்தினைக் கலைப்பது பெண்களின் சமத்துவத்தினை அடைவதற்கு அத்தியாவசியமானது என்பது பொதுவான உண்மை என்கின்ற மற்றும் மேற்கத்தேய – கீழைத்தேய வேறுபாடுகள் பெண்ணியம் தகர்க்க நினைக்கின்ற ஆணாதிக்கக் கட்டமைப்புக்கள் மீதான நியமங்கள் மற்றும் கலாசாரங்களின் செல்வாக்கின் மீது மாத்திரமே உள்ளதேயன்றி சித்தாந்தத்தின் மீதல்ல என்கின்ற கலந்துரையாடலுக்கும் புரிதலுக்கும் இது இட்டுச்சென்றது. "பெண்ணியம் என்பது பால்நிலைச் சமத்துவத்திற்காக ஆதரித்துவாதாடும் ஓர் இயக்கம்" என்பதையும் "பெண்ணியத்தின் இலக்கு அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும்" என்பதையும் படிப்படியாக ஏற்றுக்கொள்ளும் நிலை இருந்தது.



மகளிர் உரிமைகள் அமைப்புக்களினால் மேற்கொள்ளப்படும் பணிகள் பற்றிய கருத்தூன்றிய சிந்தனைகள், நிலவுகின்ற பால்நிலை வகிபாத்திரங்கள் மற்றும் அதிகார இயங்கியல்களில் இருந்து எழுகின்ற பெண்களின் நடைமுறை ரீதியான பால்நிலைத் தேவைகளைத் தீர்த்துவைப்பதற்காகப் பெண்களின் நலனோம்புகையிலும் பாதுகாப்பிலும் கவனம் செலுத்துவதைக் கோடிட்டுக்காட்டுகின்றன. சமகாலத்தில், சமமான முக்கியத்துவத்தினை வழங்கி, நிலையான மற்றும் நிலை பேண்தகு மாற்றத்திற்காக பெண்களின் உரிமைகளை வலுப்படுத்தி பால்நிலைச் சமத்துவத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் உபாயமார்க்கமிக்க பால்நிலை அக்கறைகளை இலக்குவைத்து செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கும் மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் பாடுபடுகின்றன. பலனாக, இந்த அமைப்புக்கள் தற்போது அவற்றின் பணிகளைப் பெண்ணியக் கண்ணோட்டத்துடன் நோக்குகின்றன.

முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் (புத்தளம் மாவட்டம்) பிரதான உந்துசக்தியாகத் திகழும் ஆளுமைகள் இங்கே புகைப்படத்தில் உள்ளனர் - அமைப்பின் அர்ப்பணிப்புமிக்க பணியாளர்கள்.

கல்வி, விழிப்புணர்வினை ஏற்படுத்தல், குழுக்களை உருவாக்கல், பெண்களின் பொருளாதார நிலைமையினை முன்னேற்றல், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எதிர்த்து நடவடிக்கை எடுத்தல், மற்றும் பெண்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிராக நீதிக்கான அணுகலை உறுதிப்படுத்தல் போன்ற பெண்களின் சமத்துவத்தினை மேம்படுத்துவதற்கென நிரூபிக்கப்பட்ட வழிகளைப் பற்றிப் பங்காளர்கள் கலந்துரையாடினர். பெண்களின் உரிமைகளைப் புரிந்துகொள்வதன் மூலமும் பெண்ணியக் கண்ணோட்டத்தில் இருந்து பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள் மற்றும் பாகுபாடு ஆகிய பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதன் மூலமும் இந்த முறைகளை மேம்படுத்துவதற்கான தேவை தொடர்பில் அவர்கள் இணங்கினர். பெண்களை நியாயமற்ற வகையில் நடத்தும் சமூக நியமங்கள் மற்றும் கட்டமைப்புக்களை அடையாளம் கண்டு அவற்றுக்கு எதிராகப் போராடுவதற்காக அவர்களின் பணிகளில் பெண்ணியக் கருத்தியல்களை உள்ளடக்குவதையும் அதன் மூலம் சமத்துவத்திற்காக அழுத்தம் கொடுப்பதற்குப் பெண்களை வலுவூட்டுவதையும் அவர்கள் வலியுறுத்தினர். பெண்ணியக் கோட்பாடுகளை ஏற்று நடைமுறைப்படுத்துவது, வலுவூட்டல், உள்ளடக்கம், மற்றும் சமமான பங்காண்மை ஆகியவற்றுக்கு உதவும் சூழலை உருவாக்குவதற்கு ஒன்றில் ஆதரவு வழங்குகின்ற (அல்லது சில நேரங்களில் தடையாக இருக்கும்) அவர்களின் சொந்தச் செயற்பாடுகளை அவர்கள் திறனாய்வுடன் மதிப்பிடுவதற்கு உதவும் என மகளிர் அமைப்புக்கள் குறிப்பிட்டன. பெண்களின் உரிமைகள் பற்றிய பெண்ணியக் கலந்துரையாடலைத் தொடர்ந்து நடைபெறவைப்பதில் தாம் கொண்டுள்ள வகிபாத்திரத்தினையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர்

## இலங்கையில் உள்நாட்டு மகளிர் அமைப்புக்களின் முகாமைத்துவம் மற்றும் நிலைபேறான தன்மையினை வலுப்படுத்துவதற்கான பெண்ணிய அணுகுமுறைகள்

செயற்றிட்டத்தின் போது, பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை , செயற்றிட்டத்தினால் நிதி வழங்கப்படும் செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்காக மகளிர் உரிமைகள் அமைப்புக்களுக்கு,முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு ஆற்றல்கள் தொடர்பான புரிதலையும் திறன்களையும் வழங்கி தமது பணியினை முன்னெடுத்துச்செல்ல, பங்கேற்பு, உள்ளடக்கம் மற்றும் வலுவூட்டல் ஆகிய பெண்ணிய விருத்தியின் மூன்று பிரதான கோட்பாடுகளினால் தொடர்ச்சியாக வழிகாட்டியது.

பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை ,செயற்றிட்டத்திற்கும் சமுதாய மட்ட மகளிர் உரிமைகள் அமைப்புக்களுக்கும் இடையிலான இந்த ஈடுபாடானது எப்போதும் சமச்சீரற்ற அதிகார இயங்கியல்களுக்கான அவகாசத்தினைக் கொண்டிருந்தது என்பதைப்

பற்றி பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை, செயற்றிட்டத்திடம் எப்போதும் அறிந்திருந்தது. எனவே, நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு நடைமுறைகள் தொடர்பாக பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை, செயற்றிட்டத்திடம் இருந்து உதவியினைப் பெறுவதற்காக பங்காளர்களின் ஆர்வத்தினையும் அக்கறையினையும் பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை, செயற்றிட்டம் தொடர்ச்சியாகவும் வெளிப்படையாகவும் கோரியதுடன் இதன் மூலமாக அவர்களின் தீர்மானங்களையும் தனித்தன்மையினையும் மதித்தது. நடைமுறைகளில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள், சமமான பங்காண்மைக்கான விசுவாசம் என்ற அடிப்படையில் பங்காளர்களுடனான கலந்துரையாடல்களைத் தொடர்புபடுத்தியது. பங்காளர்களில் பெரும்பான்மையானவர்கள் இவ்வாறான உதவிகளைப் பெறத் தயாராக இருந்தனர். இந்த ஈடுபாட்டின் மூலம் சில மாற்றங்களைச் சான்றாகக் காணக்கூடியதாக இருந்ததுடன் இதன்போது பங்காளர் அமைப்புக்களினால் புதிய அல்லது வித்தியாசமான முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டுக் கருவிகள் ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் முறைமைகளும் மேம்படுத்தப்பட்டன. இத்துடன் நின்றுவிடாது முகாமைத்துவத்திற்கான புதிய அணுகுமுறைகளுள் பெண்ணிய அமைப்பு ரீதியான தொலைநோக்கினையும் பணிநோக்கினையும் குறிக்கோள்களையும் உறுதிப்படுத்தல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் சட்டகங்கள், உபாயமார்க்கத் திட்டங்கள் மற்றும் பூரணமான நிதி முறைமைகள் மற்றும் நிதி திரட்டும் திட்டங்கள் மற்றும் செயற்பாட்டுக் கண்ணோட்டத்தில் இருந்து: நோக்குகையில் பூரணமான வருடாந்தச் செயற்திட்டங்கள் மற்றும் பணியாளர்களுக்கான நன்கு வரையறுக்கப்பட்ட தொழில் விபரிப்புக்கள் மற்றும் செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமைகள் ஆகியவற்றினையும் உருவாக்கினர்.

பங்காள மகளிர் உரிமை அமைப்புக்களின் ஆரம்பத் தெரிவானது ஒவ்வொரு அமைப்பினதும் பணியாளர்களிலும் முகாமைத்துவச் சபையிலும் உள்ள பெண்களின் சதவிகிதத்தினைச் சார்ந்திருந்தது. ஒவ்வொரு அமைப்பினதும் தீர்மானம் வகுத்தலிலும் முகாமைத்துவத்திலும் இயக்கச் செயன்முறையிலும் பெண்கள் பிரதான பங்குதாரர்களாக உள்ளனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு செயற்றிட்டம் முழுவதினூடும் இந்த எண்ணிக்கையினை பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டம் தொடர்ந்து கண்காணித்து வந்தது. பெண்களின் உயர் சதவிகிதம் பெயரளவிலான செயற்பாடாக இருக்கவில்லை என்பதே பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டத்தின் அனுபவமாக இருந்தது. பெண்களின் குரலும் அதிகாரமும் செயற்றிட்டம் முழுவதினூடும் சகல பங்காளர் நிறுவனங்களிலும் தொடர்ந்தும் முனைப்பாக இருந்தது என்பது தெளிவானதாகும்.

நிறுவன ரீதியான முகாமைத்துவத்திலும் பெண்ணிய அணுகுமுறைகள் உறுதிப்படுத்தப்பட்டன. இதன் போது நன்கு வரையறுக்கப்பட்ட மற்றும் பெண்ணிய நிறுவன ரீதியான தொலைநோக்கு, பணிநோக்கு மற்றும் குறிக்கோள்களைக் கொண்டிருப்பதற்கும் நிறுவன ரீதியான உபாயமார்க்கத் திட்டம் அல்லது யாப்பினைக் கொண்டிருப்பதற்கும் நன்கு வரையறுக்கப்பட்ட தொனிப்பொருள் பரப்புக்களைக் கொண்டிருப்பதற்கும் புவியியல் உள்ளடக்கத்தினைக் கொண்டிருப்பதற்கும் பயனாளிகள் மற்றும் பங்குதாரர்களைக் கொண்டிருப்பதற்கும் அதேபோன்று மகளிர் உரிமை அமைப்புக்கான ஒட்டுமொத்த வருடாந்தச் செயற்திட்டங்களைக் கொண்டிருப்பதற்கும் பங்காள அமைப்புக்ககளுக்கு உதவி வழங்கப்பட்டது. அத்துடன் மகளிர் உரிமை நிறுவனங்களுக்கான பால்நிலைக் கொள்கைகளையும் பாலியல் துன்புறுத்தல் பற்றிய கொள்கைகளையும் உருவாக்குவதற்கும் பங்காள அமைப்புக்ககளுக்கு மேலும் உதவி வழங்கப்பட்டது.

நிகழ்ச்சித்திட்ட அமுல்படுத்தலினுள் பெண்ணிய அணுகுமுறைகளை ஒருங்கிணைப்பதற்கு பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டம் வழிகாட்டலையும் உதவியினையும் வழங்கியது. மதிப்பீடுகளை ஒப்படைக்கையில் பெண்ணியக் கண்ணோட்டத்தினைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வது மற்றும் ஆய்வு வடிவமைப்புக்களையும் தரவுச் சேகரிப்புக் கருவிகளையும் உருவாக்குவது மற்றும் பயிற்சிக்காகப் பயனாளிகளைத் தெரிவுசெய்கையில் உள்ளடக்கக் கண்ணோட்டத்தினையும் வலுவூட்டல் கண்ணோட்டத்தினையும் பயன்படுத்தக் கற்றுக்கொள்வது ஆகியன பங்காளர்கள் அவர்கள் செய்துகொண்டிருக்கும் அதே பணிக்காக அவர்களுக்கு அதிக அர்த்தபூர்வமான வழிகளை

வழங்கியது. பங்காளர்களின் பணிகள் பெண்களின் வலுவூட்டலுக்கு பெண்ணிய மற்றும் உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறைகளைக் கொண்டிருப்பது தொடர்பில் வலுவான கவனக்குவிப்பினைக் கொண்டிருப்பதை இது மேலும் இயலுமாக்கியது.

மகளிர் உரிமைகள் அமைப்புக்களுக்கு நேரடியான உதவிகளை வழங்குவதன் மூலம் அந்த அமைப்புக்களின் முகாமைத்துவம் மற்றும் பணிகளை மேம்படுத்துவதற்கு பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டம் உதவியது. அமைப்புக்கள் தெரிவுசெய்கின்ற திட்டங்கள், உபாயமார்க்கங்கள் மற்றும் நடைமுறைகளை உருவாக்குவதற்கு அவற்றுக்கு உதவுவது இதில் உள்ளடங்கியுள்ளது. மேலும், நீண்ட கால நிதியிடல்களையும் தொழில்புரிகையிலேயே வழிகாட்டல்களை வழங்குவதையும் இது உள்ளடக்குவதுடன் அமைப்புக்கள் தாமாகவே அவற்றின் திறன்களை விருத்திசெய்வதற்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. உருவாக்கப்படும் திட்டங்களுக்கும் உபாயமார்க்கங்களுக்கும் பங்காளர்கள் நேரடியாகப் பங்களிப்பு வழங்குகின்றனர் மற்றும் அவற்றுக்கான உரித்தாண்மையினை எடுத்துக்கொள்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை ,செயற்றிட்டத்தினால் பெண்ணிய மற்றும் கலந்தாலோசிப்பு அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டன. இந்தத் திட்டங்களும் உபாயமார்க்கங்களும் எதிர்காலத்தில் அமைப்புக்களின் ஆளுகையினுள்ளும் முகாமைத்துவத்தினுள்ளும் நடைமுறைரீதியாகப் பிரயோகிக்கப்படும் என்பதும் இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இவ்வாறான செயன்முறைகளை அமுலில் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தினைத் தங்களின் திட்டங்கள் மற்றும் உபாயமார்க்கங்கள் பற்றிய பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டத்தினது மதிப்பீடு உணரச் செய்தது என்பதைப் பல மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் பங்காளர் கலந்துரையாடலின் போது கூறின. பங்காளர் மகளிர் உரிமைகள் அமைப்புக்களுக்கும் இலங்கையில் ஒட்டுமொத்த அபிவிருத்தித் துறைக்கும் சூழியல் ரீதியாகச் சவால்மிக்கதான ஒரு காலப்பகுதியிலேயே இந்தப் பெறுபேறுகள் எட்டப்பட்டன என்பது பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை , செயற்றிட்டம் கற்றுக்கொண்ட ஒரு விடயமாகும். செயற்றிட்டக் காலப்பகுதி மகளிர் உரிமைகளை மேம்படுத்துவதற்காகச் செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்கு அதீத சவால்மிக்க ஒரு காலப்பகுதியாக அமைந்திருந்தது. ஏனெனில், அப்போது கவனமெல்லாம் நாட்டில் கொவிட் பெருந்தொற்றால் உருவாக்கப்பட்ட அவசரத் தேவைகளிலும் பொருளதார நெருக்கடியினால் உருவாக்கப்பட்ட நெருக்கடியினைத் தொடர்ந்து ஏற்பட்ட மனிதநேய நெருக்கடியிலும் குவிந்திருந்தது. இக்காலகட்டத்தில் மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் ஏற்கனவே இருந்து வந்த செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்கும் பணியாளர்களைத் தக்கவைப்பதற்கும் வளங்களை உச்சப்படுத்துவதற்கும் போராடிக்கொண்டு சுகாதார மற்றும் பாதுகாப்புத் தராதரங்களைப் பேணிக்கொண்டு பயனாளர்களுக்குச் சேவையாற்ற வேண்டியிருந்த ஒரு காலப்பகுதியாகும். தாம் நீண்ட காலம் பணியாற்றிய வழிகளை நவீனமான மற்றும் ஒன்லைன் வழியான வேலை முறைக்குத் தகவமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட வளங்களுடனும் அவ்வாறு செய்வதற்கான குறைந்த அறிவுடனும் மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் கற்றுக்கொண்டிருந்த ஒரு காலகட்டமாக அது அமைந்திருந்தது. இக்காலகட்டத்தில் நடமாட்டத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த தடையானது, முன்மொழிவுகளை உருவாக்குவதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட சமுதாயக் கலந்தாலோசிப்புச் செயன்முறையினைப் பாதகமாகப் பாதித்தது. இக்காலகட்டமே உரிமைகள் மற்றும் வலுவுட்டல் மீது கவனம் குவிக்கப்பட்டிருந்த கொடையாளர் நிதியிடல் முன்னுரிமைகள், பெருந்தொற்று பதிற்செயற்பாட்டிற்கு மாற்றப்பட்ட காலப்பகுதியாக அமைந்திருந்தது - இப்பரப்பு அதிகமான மகளிர் உரிமைகள் அமைப்புக்களுக்கு புதியதும் பரிச்சயமற்றதுமான பரப்பாக இருந்தது. இந்த மேலதிக சவால்களைத் தாண்டி, பெண்களின் வலுவூட்டலை உறுதிப்படுத்துவதற்கும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தாம் கொண்டிருந்த இறுதிக் குறிக்கோளில் மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் உறுதியாக இருந்தன என்பதுடன் அவர்கள் எதிர்நோக்கிய யதார்த்தங்கள் மற்றும் சவால்கள் பற்றிய கற்றலும் புரிதலும் பங்காளர் மகளிர் அமைப்புக்களின் மீண்டெழுந்தன்மையில் மாத்திரம் பல பாடங்களை கற்றுக்கொள்ளச்செய்யாமல் ஒட்டுமொத்த மகளிர் இயக்கங்களிலும் பல பாடங்களை கற்றுக்கொள்ளச்செய்தது.



தலைப்பு: இலங்கையில் பெண்களின் குரலும் தலைமைத்துவமும் செயற்றிட்டத்தின் இறுதி இலக்காகக் காணப்படும் பெண்கள் மற்றும் சிறுமிகளால் குறிப்பாக விளிம்புநிலை மற்றும் நலிவுற்ற நிலையிலுள்ளவர்கள் மனித உரிமைகளை அனுபவித்தலை அதிகரித்தலுடன் நேரடியாக இணைப்பினை ஏற்படுத்தும் விதத்தில் வலுவூட்டலுக்கான நிகழ்ச்சித்திட்டத்துக்குள் உள்வாங்குதலை கொண்டுவருவதற்காக, உள்வாங்கல் மற்றும் வழிமுறைகள் மற்றும் அணுகுமுறைகள் தொடர்பாக கற்றல். வலதுகுறைந்த பெண்கள் சங்கத்தின் அர்ப்பணிப்பான ஊழியர்களின் புகைப்படம் இங்கே காட்டப்பட்டுள்ளது. (அனுராதபுர மாவட்டம்)

**இலங்கையில் பால்நிலைச் சமத்துவத்தினை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு மகளிர் உரிமைகள் அமைப்புக்களினால் தரமான சேவைகளின் மேம்படுத்தப்பட்ட விநியோகத்திற்கும் ஆதரித்துவாதாடலுக்கும் பெண்ணிய அணுகுமுறைகள்**

இலங்கையில் உள்நாட்டு மகளிர் உரிமைகள் அமைப்புக்களினால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தினையும் மேற்கொள்ளப்படும் ஆதரித்துவாதாடலின் தரத்தினையும் மேம்படுத்துவதில் பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டம் பணியாற்றியது. இந்த அமைப்புக்கள் சிறந்த சேவைகளை வழங்குவதற்கும் மிகவும் செயற்திறன்மிக்க ஆதரித்துவாதாடல் பிரச்சாரத்தினை நடத்துவதற்கும் உறுதியான இயலளவினை உருவாக்குவதற்கு அவற்றுக்கு உதவியதன் மூலம் இது மேற்கொள்ளப்பட்டது. மகளிர் உரிமைகள் அமைப்புக்களைச் சென்றடைவதை அதிகரிப்பதும் பால்நிலைச் சமத்துவத்திற்காக நிலைபேண்தகு மாற்றத்தினை மேம்படுத்துவதுமே இதன் இலக்காக இருந்தது.

இந்தப் பயணத்தில், உள்ளடக்கம் என்பது ஒரு பிரதான பரப்பாக இருந்தது. பெண்களை ஓர் ஏகவினமான குழுவாகவன்றி ஒரு பல்வகைமைமிக்க வகையினராக முன்னெடுப்பு நோக்குகையில் பெண்களின் வலுவூட்டல் தொடர்பாகப் பணியாற்றுவதும் உரிமைகளை மேம்படுத்துவதும் மிகவும் செயற்திறன்மிக்கதாக அமைகின்றது என மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் உறுதியாக நம்புகின்றன. அங்கவீனம், வகுப்பு, சாதி, வதிவிட அமைவிடங்கள், இனத்துவம் மற்றும் மதம், மொழி, வயது, சமூக அந்தஸ்து, மற்றும் கலாசாரத் தாக்கம், மற்றும் சம்பிரதாயச் சட்டங்கள் போன்ற பல விடயங்கள் ஏனைய ஒன்றுடன் ஒன்று தொடர்புற்ற விடயங்களின் மத்தியில் பெண்களின் ஏகவினமான வகையினரின் விளிம்புநிலையாக்கத்தினை உருவாக்குகின்றன.

**வலுவூட்டல் தொடர்பான நிகழ்ச்சித்திட்ட அணுகுமுறை உருவாக்கத்தினுள் உள்வாங்கல் மற்றும் முறையியலையும் பற்றிக் கற்றுக்கொள்வதானது பெண்களும் சிறுமிகளும் குறிப்பாக விளிம்புநிலையிலுள்ள பெண்களும் பாதிப்புறுநிலையிலுள்ள பெண்களும் மனித உரிமைகளை அனுபவிப்பதை அதிகரிக்கும் இது பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டத்தின் இறுதி இலக்குடன் தொடர்புற்றுள்ளது**

பெண்களை ஒரு குழுவாக ஒழுங்கமைப்பதற்காகப் பெண்களை வலுவூட்டி அவர்களுக்கு வழிகாட்டுவதையே அணிதிரட்டல் என்பதைப் பங்காளர் மகளிர் உரிமைகள் அமைப்புக்களின் பணிகளின் மூலமாக பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டம்

கற்றுக்கொண்டது. தனியாள் உறுப்பினர்களாக அல்லது சுயாதீன அமைப்புக்களாக அல்லது பாரிய அணிதிரட்டப்பட்ட அமைப்பொன்றின் உப குழுக்களாக அல்லது அலகுகளாக சிவில் சமூக அமைப்புக்களில் இணைவதற்கு அல்லது சிவில் சமூக அமைப்புக்களை உருவாக்குவதற்கு அணிதிரட்டியமையின் மூலம் மகளிர் கூட்டின் பலமானது பெண்களின் பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டலை மேம்படுத்துவதை நோக்கி உந்தம் பெற்றது.

விழிப்புணர்வினை ஏற்படுத்துவது ஆதரித்துவாதாடலின் அத்திவாரம் என்பதையும் பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டம் கற்றுக்கொண்டது. அதிகமான பெண்களும் சிறுமிகளும் அவர்களின் உரிமைகள் பற்றியும் சட்டம் பற்றியும் அவர்களுக்கு இருக்கும் உரித்துக்கள் பற்றியும் கிடைக்கின்ற சேவைகள் பற்றியும் அறிந்துகொள்கையில், அவர்கள் உரிமைகளைக் கோருவதற்கும் உரிமைகள் மீறப்படுகையில் நடவடிக்கை எடுப்பதற்கும் நீதியினைக் கோருவதற்கும் பாரிய எத்தனிப்புக் காணப்படும். பெண்களை விளிம்புநிலைக்குத் தள்ளி அவர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டும் நியமங்களையும் நடைமுறைகளையும் செயற்திறன்மிக்க முறையில் கையாண்டு அவற்றினை மாற்றுவதற்கு விழிப்புணர்வு அவசியமானதாகும். சமூக, கலாசார மற்றும் சமய ரீதியில் பெண்கள் மீது காட்டப்படும் வெறுப்பு எனும் தடையினைத் தகர்ப்பதற்கு விழிப்புணர்வென்பது ஒரு சக்திவாய்ந்த கருவியாகச் செயற்படுகின்றது. பெண்களின் தலைமையிலான சிவில் சமூக அமைப்புக்கள் கூட்டுச் சக்தியினை உருவாக்கி, பாகுபாட்டுக்கு எதிராகப் பெண்களின் குரல்களை ஓங்கச் செய்வதால், மகளிர் உரிமைகள் அமைப்புக்களின் பணிகளில் அதிகரித்த விழிப்புணர்வானது கூட்டுச் செயற்பாட்டுடன் இணைகின்றது. இது பெண்களுக்குச் சமத்துவத்தினையும் நீதியினையும் உருவாக்கும் சமூக, சட்ட மற்றும் கொள்கை மட்ட மாற்றத்திற்காக ஆதரித்துவாதாடுவதற்கு மகளிர் உரிமைகள் அமைப்புக்களை இயலுமாக்கியது. மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் அவற்றின் சேவைகளைப் பெறுகின்ற பயனாளிகள் அவர்களின் உரிமைகளுக்காக எழுந்து நிற்பதற்காக அவர்களை வலுப்படுத்துவதோடு மாத்திரமன்றி, பெண்களுக்காக இணைப்புக்களை உருவாக்குகின்றன, மற்றும் நிலைபேண்தகு மாற்றத்தினை இயலுமாக்குவதனை நோக்கிப் பங்களிப்பு வழங்கக்கூடிய கடமைப் பொறுப்பாளர்களின் அறிவினையும் விழிப்புணர்வினையும் அதிகரிக்கின்றன.

மேம்படுத்தப்பட்ட சேவை விநியோகம் மற்றும் ஆதரித்துவாதாடலுக்காக பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டத்தினால் மகளிர் உரிமைகள் அமைப்புக்களுக்கு வழங்கப்படும் உதவியானது பால்நிலைச் சமத்துவத்திற்கான பெண்ணிய அணுகுமுறையில் தொடர்ச்சியாகப் பதியப்பட்டுள்ளது. பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டத்தினால் உதவி வழங்கப்படும் செயற்றிட்டங்களின் மூலமாகப் பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் சேவை வழங்கலை மிகவும் உபாயமார்க்கமிகு முறையில் நோக்க ஆரம்பித்ததை பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டம் அவதானித்தது. ஒரு தனித்த செயற்பாடு என்பதை விட, ஒரு பரந்த பெண்ணிய இலக்கின் ஒரு பாகமாக அதைப் புரிந்துகொண்டு அதனை வெறுமனே தகவல்களைப் பரப்புவதை விடவும் மேம்பட்ட ஒன்றாக அடையாளம் கண்டன. இதனால் மகளிர் உரிமைகள் அமைப்புக்கள், பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்காக அவர்களே வெறுமனே பாதுகாப்பதில் இருந்து விலகி, பெண்களை வலுப்படுத்துவதற்காக பல்வேறு சேவைகளை இணைத்தன. நுண்கடன் சேவைகள் மூலம் பொருளாதார வலுவூட்டலுக்கு உதவுகின்ற அதேவேளை, பாலியல் வன்முறை மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை போன்ற விடயங்களைக் கையாண்டு தீர்க்கும் வெவ்வேறு பரப்புக்களை அவை ஒன்றாகக் கலந்தன. பாலியல் தொழில் போன்ற உறுதியற்ற தொழில்களைப் புரிபவர்கள் அல்லது ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் போன்ற குறைவான திறன்களைக் கொண்டவர்கள் எனக் கருதப்படுபவர்கள் போன்றவர்களின் வருமானத்தினை அதிகரிப்பதற்காக அவை மாற்றுத் தொழில்களை வழங்குதல் போன்ற சேவைகளையும் வழங்கின. எந்தப் பெண்ணும் புறக்கணிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக, "தீங்கிழைக்க வேண்டாம்" என்ற கோட்பாட்டினை உள்ளடக்கி பெண்களின் பரிணமித்துவரும் தேவைகளை மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் சிறந்த முறையில் புரிந்துகொண்டு அவற்றினை நிறைவேற்ற ஆரம்பித்தன. யாரும் விலக்கிவைக்கப்படவில்லை அல்லது யாருக்கும் தீங்கிழைக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தி, அவை ஆண்களைச் சேவை வழங்குனர்களாகவும் பயனாளர்களாகவும் ஈடுபடுத்தின.

## பால்நிலைச் சமத்துவத்தினை அடைவதற்கான பெண்ணிய அணுகுமுறைகள்

தொழில்நுட்ப ரீதியாக மற்றும் நிதி ரீதியாக பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டத்தின் உதவியுடன் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் பெறுபேறுகள் மகளிர் உரிமைகள் அமைப்புக்களினால் பெருமளவுக்குப் பால்நிலைச் சமத்துவக் கண்ணோட்டத்தில் இருந்து வெளிப்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும், பெண்ணியம் பற்றிய கருத்தியல் ரீதியான தெளிவினைப் பெற்று, பெண்ணிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தும் பெண்ணிய அமைப்புக்கள் அவற்றினைப் பெண்ணியல்வாதிகள் என அழைப்பதில் ஆரம்பத்தில் கொண்டிருந்த தயக்கத்தில் இருந்து நகர்ந்தமை, அவர்களின் அணுகுமுறைகள் உண்மையில் பெண்ணியமானவையே எனப் பங்காளர்கள் புரிந்துகொள்வதற்கு அவர்களை இயலுமாக்கியது.

சமுதாய மட்டத்தில், இலக்குவைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பால்நிலை இயங்கியல்கள் மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பாகச் சமுதாயங்களினதும் உள்ளூர்ச் சேவை வழங்குனர்களினதும் விழிப்புணர்வினையும் கூருணர்வினையும் தம்மால் அதிகரிக்கக் கூடியதாக இருந்ததாகப் பங்காளர்கள் கூறுகின்றனர். தம்மால் நிறைவேற்றப்பட்ட பணிகளினாலேயே சமுதாய மட்டத்தில் பெண்களின் பங்கேற்பு அதிகரிப்பதற்கும் பெண்களின் இலட்சியங்கள் அரசியல் ரீதியாக முனைப்பானவையாக மாறுவதற்கும் சமுதாய மட்ட அமைப்புக்களுக்குத் தலைமை தாங்குவதற்கும் அரசாங்கப் பங்குதாரர்களுடன் தமது உரிமைகளுக்காக ஆதரித்துவாதாடுவதற்கும் காரணமாக இருந்து வருகின்றது என அவர்கள் மதிப்பிடுகின்றனர். குடும்பங்களினுள் பகிரப்பட்ட பொறுப்புக்களில் அதிகரிப்பு ஏற்பட்டு வீட்டில் பெண்களினதும் சிறுமிகளினதும் அந்தஸ்து உயர்வதற்கும் பங்காளர்கள் காரணமாகியுள்ளனர்.

சமுதாயத்திற்கு அப்பால் சென்று நோக்குகையில், தாம் குறிப்பிடத்தக்க மைல்கற்களை எட்டியுள்ளதாக மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் கூறுகின்றன. பெண்களின் தலைமையிலான தொழிற்சங்கங்களை அவை வெற்றிகரமாகத் தாபித்துள்ளன. இது, பெண் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக ஆதரித்துவாதாடுவதில் முக்கியமான வகிபாத்திரத்தினை வகித்து, தனியார் துறைக் கம்பனிகளையும் அரசாங்கத்தினையும் வகைப்பொறுப்புக் கூறவைப்பதிலும் வெற்றியடைந்துள்ளது. தேயிலைத் தோட்டச் சமுதாயப் பெண்களின் உரிமைகளுக்காகப் பாடுபடும் அவற்றின் தற்போதைய முயற்சிகளின் காரணமாகப் பெண் தொழிலாளர்களின் உரிமைகள் கொள்கைச் சட்டகங்களினுள்ளும் கொள்கை மறுசீரமைப்புக்களிலும் உள்வாங்கப்பட்டு, குறிப்பாக கூட்டு உடன்படிக்கையின் மூலமாக சுகாதார உரிமைகள் தொடர்பான பரப்புக்களில் உள்வாங்கப்பட்டுள்ளன. இதனால், தொழிலாளர்களின் வேலை நிலைமைகள் முன்னேற்றமடைந்துதுள்ளன. அரசியல் பங்கேற்பில் பெண்களின் ஆர்வத்தில் அவதானிக்கத்தக்க மட்டத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதுடன் பல பெண்கள் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான அவர்களின் உறுதியான ஆர்வத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். பிராந்தியக் குழுக் கூட்டங்களில் பெண்கள் முனைப்புடன் பங்குபற்றிவருவதுடன் நலனோம்புகைகள் தொடர்பான மேன்முறையீட்டுக் குழுக்களிலும் பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். மேலும், தங்களின் வளர்ந்து வரும் செல்வாக்கினையும் தாக்கத்தினையும் காட்சிப்படுத்தி, பெண்கள் மற்றும் சிறுவர் தொடர்பான விடயங்களுக்கு பதிற்செயற்பாடாற்றி மன்றுகளிலும் உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர்.

மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும், பெண்களுக்கான சேவைகள் கிடைப்பதில் அதிகரிப்புக் காணப்படுகின்றது. பெண்களின் மன்றங்கள் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிராகப் பணியாற்றும் மன்றங்கள் போன்ற வலையமைப்புக்கள் சேவை வழங்குனர்களின் மத்தியில் பெண்களின் வளப் பகிர்வினையும் சம்பவ முகாமைத்துவத்தினையும் ஒருங்கிணைப்பினையும் மேம்படுத்தியுள்ளன. ஆதரித்துவாதாடல் முயற்சிகள் நிறுவன ரீதியான மாற்றங்களை உருவாக்கியுள்ளன. அதாவது, மாகாண மட்டத்தில், அரசாங்க நிறுவனங்களில் அங்கவீனமானவர்கள் மீது கவனம் செலுத்தி அணுகல் நியமங்களைக் கட்டாயமாக்கும் சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதனால், அங்கவீனமான பெண்களுக்குச் சிறந்த அணுகல் கிடைப்பதுடன் பெருந்தோட்டங்களிலும் ஏனைய இடங்களிலும் உள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் பெண்களின் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கெனத் தனியான பணியகம் தாபிக்கப்படுவதற்கும் வழியேற்பட்டுள்ளது. அரசாங்க அதிகாரிகளுடனான ஈடுபாட்டின் காரணமாக அவர்கள் பயிற்சிகளிலும் விழிப்புணர்வு உருவாக்க நிகழ்ச்சித்திட்டங்களிலும் அதிகரித்த அளவில் பங்குபற்றுவது உருவாகியுள்ளதுடன் இது மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் பெண்களுக்கு இன்றியமையாத இணைப்புக்களை உருவாக்கியுள்ளது.

தேசிய மட்டத்தில், கொள்கை மற்றும் சட்ட மறுசீராக்கல் முயற்சிகளுக்கு மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் முனைப்பாகப் பங்களிப்பு வழங்கி வருகின்றன. பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டத்தின் கீழ், மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் அவற்றின் பரிந்துரைகளை பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டலுக்கான தேசிய செயற்திட்டத்தின் ஊடாக சமர்ப்பித்துள்ளன. காணி மறுசீராக்கல்கள் பற்றிய ஒரு தேசிய கருத்தியல் சுருக்கத்தினை மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் தொகுத்துள்ளதுடன் இலங்கையில் மூப்படைந்து வரும் மக்களின் பெண்ணியமாக்கம் பற்றிய ஆய்வுக் கற்கையினைத் தொடங்கி, இது தொடர்பான பரிந்துரைகளுடன் கொள்கை வகுப்பாளர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் ஒரு கொள்கைச் சுருக்கத்தினையும் உருவாக்கியுள்ளன. பால்நிலைப் பாகுபாடுமிக்க முஸ்லிம் திருமண, விவாகரத்து சட்டத்திற்கு மறுசீரமைப்புக்களைக் கொண்டுவருவதற்காக, சர்வதேச தொழில் அமைப்பின் வன்முறை மற்றும் துன்புறுத்தல் பற்றிய 2019 ஆம் ஆண்டின் 190 ஆம் சமவாயத்தினை ஏற்று அங்கீகரிப்பதற்காகப் பல மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் ஆதரித்துவாதாடல் முன்னெடுப்புக்களுக்குப் பங்களிப்பு வழங்கி, அங்கவீனமான பெண்களுக்காக, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் கீழ் ஒரு தேசிய சபையினைத் தாபிப்பதற்காக அழுத்தமும் வழங்கியுள்ளன. கடந்த 4 வருடங்களாக இந்த அமைப்புக்கள் ஆற்றியுள்ள பணியினை மீளாய்வு செய்கையில், சூழியல் சார்ந்த மற்றும் சமூக ரீதியான சவால்களைத் தாண்டி, இலங்கையில் மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் பெண்களின் உரிமைகள் மற்றும் பால்நிலைச் சமத்துவம் தொடர்பில் கணிசமான பங்களிப்பினை வழங்கியுள்ளமை தெரியவருகின்றது.

## பெண்களின் குரல்களையும் செயலாண்மையினையும் வலுவூட்டலையும் மேம்படுத்தல்

பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டங்களின் மூலம் பொறுப்பேற்கப்பட்டுள்ள மகளிர் உரிமைகள் அமைப்புக்களின் பணிகளுக்கு ஆதாரபலமாக இருக்கும் பெண்ணியக் கோட்பாடுகள், குரலும், செயலாண்மையும், வலுவூட்டலுமே என பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டம் அடையாளங்கண்டுள்ளது.

பெண்களின் குரலையும் செயலாண்மையினையும் வலுவூட்டலையும் அதிகரிப்பதில் சமுதாய அணிதிரட்டல் வகிக்கும் வகிபாத்திரம் தொடர்பாக நோக்குகையில், பெண்கள் விளிம்புநிலையாக்கத்திற்கும் பாகுபாட்டிற்கும் முகங்கொடுப்பதாகவும் மட்டுப்படுத்தப்பட்ட விழிப்புணர்வினையே கொண்டுள்ளதாகவும் நடமாட்டக் கட்டுப்பாடுகளைக் கொண்டிருப்பதாகவும் தமது சமுதாயங்களினுள் முனைப்பாக இருப்பதற்கும் தம்மை வெளிப்படுத்துவதற்கும் அடிக்கடி போராடுவதாகவும் மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் விளக்குகின்றன. பெண்களின் குரல்களை ஓங்கச் செய்வதற்கு, மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் சமுதாயங்களினுள் உள்ள மகளிர் குழுக்களைச் சுய உதவிக் குழுக்களாக உருவாக்குவதற்கும் மகளிர் சங்கங்களாக உருவாக்குவதற்கும் கிராமியக் குழுக்களாக உருவாக்குவதற்கும் அவற்றினை அணிதிரட்டியதுடன் சிலவற்றினைச் சமுதாய மட்ட அமைப்புக்களினுள் முறையாகத் தாபித்தன. பெண்கள் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் அவர்களின் கரிசணைகளை வெளிப்படுத்துவதற்கும் அவர்களின் தேவைகளை வெளிப்படுத்துவதற்கும் கூட்டொருமை உணர்வினை உருவாக்குவதற்கும் இது தளங்களை உருவாக்கியது. பெண்கள் அவர்களின் குரல்களை ஓங்கச் செய்வதற்கான தளத்தினை மேலும் விரிவுபடுத்தி, ஏனைய சமுதாயப் பங்குதாரர்களுடன் அவர்கள் வலையமைப்புக்களை உருவாக்குவதற்கு இந்தக் குழுக்கள் இயலுமாக்கப்பட்டன.

**செயலாண்மையானது தீர்மானம் எடுப்பதற்கான சுயாதீனத்தினை பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டம் பங்காளர்களுக்கு வழங்குவதுடன் நடப்பு நிலவரத்தினைக் கேள்விக்குட்படுத்தி அதன் மூலம் கலாசாரம் மற்றும் சமயக் கட்டுப்பாடுகளைத் தாண்டி அவர்கள் தங்களின் சொந்த அடையாளத்தினை உருவாக்குவதற்கும் அவர்களுக்கு உதவுகின்றது.**

பெண்கள் அவர்களின் செயலாண்மையினை உறுதிப்படுத்தக்கூடிய ஒரு வெற்றிகரமான வழியாகவே சமுதாயக் குழுக்களை உருவாக்கும் உபாயமார்க்கம் பரவலாகக் கருதப்படுகின்றது. இந்த சமுதாயக் குழுக்களில் உள்ள பெண்களின் பல்வகைமைமிக்க குழுக்களின் வரையறுக்கப்பட்ட பிரதிநிதித்துவமானது, விளிம்புநிலையாக்கத்திற்கு முகங்கொடுக்கும் பெண்களின் செயலாண்மைக்குத் தடையாக இருக்கின்றது என்பதை அடையாளங்கண்ட மகளிர் உரிமைகள் குழுக்கள், இப்பெண்களைச் சமுதாயக் குழுக்களில் பெரும்போக்காக்குவதற்காகப் 'பால்நிலைச் சமத்துவம்' மற்றும் 'சமூக உள்ளடக்கம்' ஆகிய அணுகுமுறைகளைக் கைக்கொண்டு அதன் மூலம் இப்பெண்கள் அவர்களின் சகபாடிகள் போலவே செயலாண்மையினை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டன.

நிதி வளங்களுக்கான அணுகலையும் அவற்றின் மீதான கட்டுப்பாட்டினையும் பெண்களுக்கு வழங்கியதன் மூலம் சமுதாயக் குழுக்கள் பெண்களை வலுவூட்டுவதில் முக்கியமான வகிபாத்திரத்தினை வகித்துள்ளதுடன் சேமிப்புக்கள், முதலீடுகள், மற்றும் வியாபார அபிவிருத்தி ஆகியவற்றின் மீது பெண்களின் நிதிச் சுயாதீனம் மற்றும் தீர்மானம் வகுக்கும் ஆற்றல் ஆகியவற்றினையும் போஷித்துள்ளது. பயிற்சி மற்றும் திறன் விருத்திக்கான வாய்ப்புக்களை இக்குழுக்கள் பெண்களுக்குத் தொடர்ந்து வழங்குகின்றன. இதனால் பெண்கள் அடிமட்ட ஆதரித்துவாதாடலில் ஈடுபடக்கூடியவர்களாக இருப்பதுடன் தங்களின் சமுதாயத்தினுள் பிரச்சினைகளுக்கு எதிராகக் கூட்டு நடவடிக்கைகளை எடுக்கக்கூடியவர்களாகவும் இருக்கின்றனர். பெண் உறுப்பினர்களையும் ஏனைய சமுதாய உறுப்பினர்களையும் அரசாங்கச் சேவைகளுடனும் உதவிகளுடனும் இணைக்கும் ஒரு முக்கியமான இணைப்பாகச் சமுதாயக் குழுக்கள் செயற்படுகின்றன. பெண்களின் சுய வலுவூட்டலில் சமுதாயக் குழுக்களின் தாக்கம் கணிசமானதாகும் என்பதுடன் பலர் தங்களின் விருப்பங்களையும் பலாபலன்களையும் அடைவதற்கு முயற்சிப்பதில் அதிகரித்த தன்னம்பிக்கையினையும் விசுவாசத்தினையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறையினால் பாதிக்கப்பட்டு வாழ்பவர்களின் குரலையும் செயலாண்மையினையும் வலுவூட்டலையும் அதிகரிக்கப் பணியாற்றும் மகளிர் உரிமைகள் அமைப்புக்கள், கூருணர்வின்மை, சமூக எதிர்விளைவுகள் பற்றிய அச்சம், சுய குற்றச்சாட்டு உள்ளிட்ட பல்வேறு காரணிகளினால் பெண்களும் சிறுமிகளும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய தங்களின் அனுபவம் பற்றிக் குரலெழுப்புவதற்குப் பொதுவாகத் தயங்குகின்றனர் என விளக்கியதுடன் இந்தச் சவால்களை எதிர்கொள்வதற்கு இம்மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் பல உபாயமார்க்கங்களைப் பயன்படுத்தி வருகின்றன. இவற்றுள், மகளிர் உரிமைகள் அமைப்புக்களின் மூலம் தாமே சேவைகளை வழங்குதல் உள்ளடங்குகின்றது. ஏனைய சேவை வழங்குனர்களை அல்லது சட்ட அமலாக்கத்தினை அணுகுவதற்குப் பலரும் தயங்குகின்ற காரணத்தினால் பெண்கள் தாம் எதிர்நோக்கிய வன்முறையினைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாதுகாப்பான தளத்தினை இது வழங்குகின்றது. தனிநபர்கள் முன்வந்து அவர்களின் அனுபவங்களைப் பகிர்வதற்கு அவர்களை ஊக்குவிப்பதில் சமுதாயக் குழுவினைத் தாபித்தமை காத்திரமான வகிபாத்திரத்தினை வகித்துள்ளது. இப்பிரச்சினைகளை எதிர்நோக்குவதில் பாதிக்கப்பட்டவர்கள் தனியே இல்லை என இந்தக் குழுக்கள் அவர்களுக்கு மீள் உத்தரவாதம் வழங்கியுள்ளதுடன் இப்பிரச்சினைகளைக் கையாளுவதற்காக நம்பிக்கையினை அவர்களில் போஷித்துள்ளது. மேலும், பங்கீடுபாட்டாளர்களின் மத்தியிலும் பொதுமக்களின் மத்தியிலும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காகப் பெண்களை வலுவூட்டுவதற்கு அரசாங்கத்தினால் தலைமை தாங்கப்படும் முறைசார் தளங்கள், மற்றும் சமூக ஊடகங்கள் போன்ற ஏனைய பல்வேறு தளங்களை மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் பயன்படுத்தியுள்ளன.

பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினால் பாதிக்கப்பட்டு சமுதாயத்தினுள் வாழ்பவர்கள் தங்களின் சூழ்நிலையினை எவ்வாறு கையாள வேண்டும் என்பது பற்றிய தீர்மானம் எடுப்பதில் மிகுந்த செயலாண்மையினைக் காட்டுகின்றனர் என மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் அவதானித்துள்ளன. இவர்கள் சமுதாயத் தலைவர்களிடம் இருந்தும் மகளிர் உரிமைகள் அமைப்புக்களிடம் இருந்தும் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற சேவை வழங்குனர்களிடம் இருந்தும் உதவியினை நாடுகின்றனர். இது செயலாண்மையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பினையே பிரதிபலிக்கின்றது. மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் பாதிக்கப்பட்டு வாழ்பவர்களின் மத்தியில் வலுவூட்டலில் அதிகரிப்பினை அவதானித்துள்ளது. குறிப்பாக, பெண்களின் திறன்களை அதிகரிப்பதற்காக மகளிர் உரிமைகள் அமைப்புக்களினால் நடத்தப்பட்ட பல்வேறு முன்னெடுப்புக்களால்

உருவான அதிகரித்த நிதிச் சுயாதீனம் தொடர்பில் இதனைக் காண முடிகின்றது. சமுதாயக் குழுக்களினால் வழங்கப்படும் அதிகரித்த சமுதாய உதவியினால் இந்த வலுவூட்டல் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, குற்றமிழைப்பவர்களில் சார்ந்திருப்பதைக் குறைப்பதில் பெண்கள் நம்பிக்கையினைப் பெற்று, தமக்காகவும் தமது பிள்ளைகளுக்காகவும் வன்முறையற்ற சூழலை உருவாக்குவதன் மூலம் தம் வாழ்வைத் தாமே கட்டுப்படுத்தும் பல சந்தர்ப்பங்களை மகளிர் உரிமைகள் ' அமைப்புக்கள் அவதானித்துள்ளன.

பெண்களின் அரசியல் பங்கேற்பு மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றினை மேமப்படுத்துவதற்காகப் பெண்களின் குரல்களையும் செயலாண்மையினையும் வலுவூட்டலையும் அதிகரிக்கும் மகளிர் உரிமைகள் அமைப்புக்கள், அரசியலில் பெண்களின் குரல்கள் போதிய அளவிற்குப் பிரதிநிதித்துவம் செய்யப்படாததால்,அவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு வகையான சவால்கள் பற்றி அறியாதுள்ளனர் எனக் கருத்து வெளியிட்டுள்ளன. பெண்களின் உண்மையான பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்துவதற்காக, அபிலாஷைமிக்க பெண் அரசியல்வாதிகளும் சமுதாயத் தலைவர்களும் அரசாங்க அதிகாரிகளும் அவர்களின் அரசியல் நிகழ்ச்சிநிரலினுள் பால்நிலையினைப் பெரும்போக்காக்குவதற்காக அவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அவர்களுக்காக பயிற்சி, விழிப்புணர்வேற்படுத்தல் மற்றும் கூருணர்வுருவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றினை மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் நடத்தியுள்ளன. வளர்ச்சியடைந்து வரும் பெண்களின் குரல்களைக் குறியீடாக்கி, ஆர்ப்பாட்டங்கள் போன்ற அரசியல் நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பினை அதிகரிப்பதற்காக மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் விழிப்புணர்வு ஏற்படுத்துவதிலும் பெண்களை அணிதிரட்டுவதிலும் முனைப்புடன் ஈடுபட்டன.

உள்ளூராட்சிச் செயன்முறைகளையும் பொறுப்புக்களையும் கிடைக்கின்ற அரசாங்க சேவைகளையும் பற்றிய பெண்களின் புரிதலை அதிகரிப்பதற்காக மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் இலக்குவைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தின. தமது அரசியல் பங்கேற்பினை அதிகரிக்க அபிலாஷை கொண்டுள்ள பெண்களுக்காகச் சமுதாயத் தேவைகளை அடையாளப்படுத்தல், முன்மொழிவு எழுதுதல், நிதி திரட்டல் மற்றும் வரவு செலவுத்திட்ட உருவாக்கம் உள்ளிட்ட செயற்திறன்மிக்க அரசியல் தலைமைத்துவத்திற்குத் தேவைப்படும் தலைமைத்துவத் திறன்களையும் ஏனைய அத்தியாவசியத் தகைமைகளையும் உருவாக்குவதில் மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் பயிற்சியினை வழங்கியுள்ளன. இதன் விளைவாக, அரசியல் கட்சிகளில் சேர்தல் போன்ற தமது ஈடுபாட்டினை அதிகரிக்கும் பெண்களின் செயலாண்மையில் அவதானிக்கத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

பல பெண்கள் தீர்மானம் வகுக்கும் வகிபாத்திரங்களை ஏற்றுள்ளனர். ஆணாதிக்கக் கட்டமைப்புக்கள் நிலவுகையிலேயே அவர்கள் அவற்றினை ஏற்றுள்ளனர். பெண்களின் தலைமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்குச் சிலர் தளங்களை உருவாக்கியுள்ளனர். உதாரணமாக, அரசியலில் பங்குபற்றுவதற்குப் பெண்கள் மத்தியில் ஆர்வம் அதிகரித்து வருகின்றது. நடைபெறவுள்ள தேர்தலில் வேட்பாளர்களாக வருவதற்குப் பலரும் அபிலாஷை கொண்டுள்ளனர். பெண்களின் தொழில் உரிமைகள் என்ற சூழமைவில் நோக்குகையில், மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் பெண்களின் தலைமையிலான தொழிற்சங்கங்களைத் தாபித்துள்ளதுடன் பெண் தொழிலாளர்களின் பேரம் பேசும் சக்தியினை அதிகரிப்பதற்காகப் பெண்களின் தலைமையிலான தொழிற்சங்கங்களின் சம்மேளனம் ஒன்றினைத் தாபிப்பது தொடர்பில் பணியாற்றி வருகின்றனர். மேலும், சில பெண்கள் பல்வேறு வலையமைப்புக்களினுள்ளும் கூட்டமைப்புக்களினுள்ளும் பதவிகளை ஏற்றுள்ளனர். இந்த மாற்றங்கள் பாரம்பரியமான இந்த ஆணாதிக்கத் தளங்களினுள் பெண்களின் அரசியல் வலுவூட்டலையும் தலைமைத்துவத்தினையும் செல்வாக்கினையுமே சுட்டிக்காட்டுகின்றன.

ஓர் உபாயமார்க்கமிக்க அணுகுமுறையாக, மகளிர் உரிமைகள் அமைப்புக்கள், சமுதாயக் குழுக்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையில் வலையமைப்புக்களையும் இணைப்புக்களையும் உருவாக்கியுள்ளன. இந்தச் சமுதாயக் குழுக்களில் உள்ள பெண்கள் அரசாங்க அதிகாரிகளுடன் ஈடுபாடு கொள்வதற்காக இந்தத் தொடர்புகளைப் பயன்படுத்துகின்றனர் என்பதுடன் சமுதாயப் பிரச்சினைகள் தொடர்பில் கவனத்தினைப் பெறுவதற்கும் அவற்றுக்காக ஆதரித்துவாதாடுவதற்கும் இதனைப் பயன்படுத்தி அதிகரித்த செயலாண்மையினையும் வலுவூட்டலையும் குறியீடாகக் காட்டி வருகின்றனர். இவர்களின் வலுவூட்டல் அரசாங்க அதிகாரிகளுக்கு மிகவும் தெளிவானதாக மாறி, பெண்கள் பற்றிய அவர்களின் மனப்பாங்குகளிலும் புலனுணர்வுகளிலும் ஒரு மாற்றத்திற்கு இட்டுச் சென்றுள்ளது.

பெண்கள் தொடர்பாக அரசாங்க அதிகாரிகள் சாதகமான கண்ணோட்டத்தினையும் புலனுணர்வினையும் கொண்டிருப்பதற்கான மற்றொரு காரணி, மகளிர் உரிமைகள் அமைப்புக்களினால் எடுக்கப்பட்ட இரட்டை அணுகுமுறையாகும். மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் அரசாங்க அதிகாரிகளுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் கூருணர்வாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியதுடன் பல்வேறு தலைப்புக்களில் மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் பெண்களுக்காக நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களிலும் பயிற்சிகளிலும் இவர்களை அமைப்புக்கள் முனைப்பாக ஈடுபடுத்தின. இதன் விளைவாக, அரசாங்க அதிகாரிகள் பெண்களைக் கூட்டங்களில் உள்ளடக்க ஆரம்பித்ததுடன் சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அவர்களின் உதவியினை முனைப்பாக நாடவும் ஆரம்பித்தனர். சமுதாயத்துடன் அரசாங்க அதிகாரிகளின் அடைவினையும் ஈடுபாட்டினையும் நீட்டிக்கச் செய்வதில் பெண்களின் தலைமைத்துவமும் அரசியல் வலுவூட்டலும் முக்கியமான வகிபாத்திரத்தினை வகித்துள்ளன என மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் அவதானித்துள்ளன.

தமக்கு மிகவும் விருப்பமான வருமானம் ஈட்டும் முறைகள் தொடர்பாகத் தீர்மானம் வகுக்கையில் பெண்கள் முகங்கொடுக்கும் சவால்களை அடையாளங் கண்ட மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் திறன் விருத்தி மூலமாகப் பெண்களின் பொருளாதாரச் செயலாண்மையினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்த அதேவேளை, நிதிச் சேவைகளுக்கும் ஏனைய வளங்களுக்குமான அணுகலை உறுதிப்படுத்தி அரசாங்க அதிகாரிகளுடனான இணைப்புக்களைத் தாபிப்பதையும் சந்தைக்கான அணுகலையும் உறுதிப்படுத்தின. மகளிர் உரிமைகள் அமைப்புக்களின் முயற்சிகள் உயர் வருமானங்களுக்கும் சேமிப்புக்கள் மற்றும் முதலீடுகள் தொடர்பாக பாரிய தீர்மானம் வகுத்தல் அதிகாரத்திற்கும் இட்டுச்சென்றதுடன் வியாபார நடவடிக்கைகளை விஸ்தரிப்பது தொடர்பான தெரிவுகளை மேற்கொள்வதில் சுயாதீனத்திற்கும் இட்டுச்சென்றன. சில குறிப்பிட்ட சுய உதவிக் குழுக்களின் கட்டமைப்பானது நிதி வளங்களின் மீதான பெண்களின் கட்டுப்பாட்டினை முன்னேற்றியுள்ளன. சுய உதவிக் குழு மட்டத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்ட சேமிப்புக்களும் கடன் திட்டங்களும் அவர்களுக்கு நிதி வழங்களின் மீது ஒரு குறிப்பிட்ட அளவிலான கட்டுப்பாட்டினை வழங்கியுள்ளது. மேலும், அவர்களின் வியாபாரங்களின் வளர்ச்சியுடனும் தனிப்பட்ட தேவைகளுடனும் இயைபுறும் வழிகளில் இந்த வளங்களை ஒதுக்குவதற்கு அதிக வாய்ப்புக்களை வழங்கியுள்ளது – மேம்படுத்தப்பட்ட செயலாண்மை மற்றும் பொருளாதார வலுவூட்டல் பற்றிய பிரதிபலிப்பு.

பெண் தொழிலாளர்களுக்கு அவர்களின் உரிமைகள் மற்றும் சட்ட நடைமுறைகள் பற்றிய அறிவினை வழங்கியதன் மூலம் அவர்களின் அதிகரித்த பொருளாதாரச் செயலாண்மை மற்றும் வலுவூட்டலுக்கு மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் பங்களிப்பு வழங்கியுள்ளன. மகளிர் அமைப்புக்கள் சட்ட உதவியினை வழங்கியுள்ளதுடன் தொழில் திணைக்களத்தின் அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்புகளையும் வசதிப்படுத்தியுள்ளன. நட்டஈட்டினையும் நலன்களையும் கோருவதன் மூலம் அவர்களின் பொருளாதார உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான அவர்களின் ஆற்றலை அதிகரிப்பதற்கான இந்த முயற்சிகள் வலுவூட்டலின் ஒரு மட்டத்தினைப் பிரதிபலிக்கின்றன. ஏனெனில், முன்பு பெண்களின் பொருளாதார வாய்ப்புக்கள், பலாபலன்கள், பாதுகாப்பு மற்றும் மீண்டெழுந்தன்மை ஆகியவற்றினைக் கட்டுப்படுத்திய உரிமை மீறல்களுக்குப் பெண்கள் நேரடியாகச் சவால் விடுக்கின்றனர். தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் சட்டத்திற்கு முரணான வகையில் பொதுவாக மூடப்பட்ட பொருளாதார நெருக்கடிச் சூழமைவில் இது இன்றியமையாத இருந்தது.

### மகளிர் உரிமைகள் அமைப்புக்களின் பணிகளுக்கு உதவியதன் மூலமாக வீட்டினுள் பெண்களின் அதிகரித்த குரல், செயலாண்மை மற்றும் வலுவூட்டல் ஆகிய பெறுபேறுகளை பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டம் கண்டது.

மகளிர் உரிமைகள் தொடர்பான தமது பணிகளில் ஆண்களையும் சிறுவர்களையும் ஈடுபடுத்துவதற்கு மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் உபயாமார்க்கமிக்க இடையீடுகளைப் பயன்படுத்தின. பெண்களின் குரல், செயலாண்மை மற்றும் வலுவூட்டலை அதிகரிப்பதற்கான முயற்சிகள் ஆண்களையும் சிறுவர்களையும் ஈடுபடுத்த வேண்டும் என்பதை அடையாளம் கண்ட மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் விழிப்புணர்வுருவாக்க நிகழ்ச்சித்திட்டங்களையும் கூருணர்வாக்க நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியதுடன் பால்நிலைச் சமத்துவம், மகளிர்

உரிமைகள், வலுவூட்டல் மற்றும் நேசக் கூட்டுக்களாக ஆண்கள் மற்றும் சிறுவர்களின் வகிபாத்திரம் போன்ற தலைப்புக்களை உள்ளடக்கி சமுதாயத்தினுள் ஆண்களுக்கும் சிறுவர்களுக்கும் தகவல் ஆவணங்களை விநியோகித்தன.

வீட்டினுள்ளும் வீட்டிற்கு வெளியேயும் பெண்கள் பொறுப்பேற்று நிறைவேற்றும் பணிகள் பற்றிய ஆழமான மெச்சுதலைப் பாராட்டுவதற்காக, மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் கூட்டொருமையினைப் போஷிப்பதற்காகவும் ஆதரவுமிக்க வகிபாத்திரத்தினைக் குடும்பங்கள் வகிப்பதற்காக அவற்றுக்கு அகத்தூண்டுதல் வழங்குவதற்காகவும் பெண்களையும் அவர்களின் அடைவுகளையும் கொண்டாடும் நிகழ்வுகளில் குடும்பங்களை முனைப்புடன் ஈடுபடுத்தின. மேலும், பாரம்பரிய பால்நிலை வகிபாத்திரங்களுக்குச் சவால் விடுப்பதற்காகவும் பகிரப்பட்ட பொறுப்புக்களை மேம்படுத்துவதற்காகவும் குறிப்பிட்ட பயிற்சிகள் மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் ஆண்களையும் சிறுவர்களையும் உள்ளடக்கின. உதாரணமாக, வீட்டுத் தோட்டத்தில் பயிற்சி மற்றும் சேதனப் பசளை உற்பத்தியில் பயிற்சி போன்ற உணவுப் பாதுகாப்பினை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களில், ஒரு குடும்பத்தின் உணவுப் பாதுகாப்பு என்பது பெண்களில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் அதே குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களையும் சிறுவர்களையும் உள்ளடக்கின.

இந்த இடையீடுகளின் விளைவாக, வீட்டினுள் தாம் வழங்கும் பங்களிப்புக்களுக்கான அதிகரித்த அங்கீகாரத்தினையும் மரியாதையினையும் கண்டுகொண்டதாகப் பெண் பயனாளர்கள் தெரிவித்ததுடன் தமது குடும்பங்களினுள் அதிகரித்த பேச்சுவார்த்தைகளும் தீர்மானம் வகுக்கும் அதிகாரமும் காணப்படுவதாகவும் குறிப்பிட்டனர். இவர்கள் இப்போது குடும்பத்தின் நிதிகள் மற்றும் செலவுகள் தொடர்பில் பாரிய தீர்மானம் வகுக்கும் சக்தியினைக் கொண்டுள்ளதுடன் பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதாரத் தெரிவுகளில் அதிக கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ளதுடன் நடமாட்டத்திற்கான அதிகரித்த சுதந்திரத்தினையும் அனுபவிக்கின்றனர். சில இடங்களில், வீட்டு வன்முறைச் சம்பவங்கள் குறைவடைந்து மேம்பட்ட குடும்ப வாழ்க்கை ஏற்பட்டுள்ளது. பெண்கள் குடும்பப் பொறுப்புக்களைப் பகிர்ந்து வருமானப் பிறப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவதால், அவர்கள் மிகவும் வலுப்படுத்தப்பட்டுள்ளவர்களாக அவதானிக்கப்படுகின்றனர்.

பெண்களின் செயலாண்மையினை வலுப்படுத்துவதற்கும் அவர்களின் வலுவூட்டலுக்குப் பங்களிப்பு வழங்குவதற்கும் பெண்களின் குரல் இட்டுச்செல்வதை உறுதிப்படுத்தும் பல்வேறு வழிகள் பற்றி மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் பேசுகின்றன. இவற்றுள், சமுதாயத்தில் மகளிர் உரிமைகளுக்காக உள்ளூராட்சி அதிகாரிகளுடனும் அரச அதிகாரிகளுடனும் ஊழியர்களுடனும் சேவை வழங்குனர்களுடனும் கொள்கை வகுப்பாளர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் ஆதரவு திரட்டுவதற்கும் ஆதரித்துவாதாடுவதற்குமான கூட்டுக் குரலுக்காக மகளிர் குழுக்களை உருவாக்குதல் உள்ளடங்குவதுடன்; பின்வருனவற்றின் மூலம் வன்முறைச் சூழல் தொடர்பாக அதிகமான பெண்கள் முறைப்பாடு செய்ய முன்வருவதற்கு அவர்களை ஊக்குவிப்பதும் சமூகத்தில் இப்பெண்கள் அவர்களுக்குரிய இடத்தினை மீளப்பெறுவதற்காக அவர்களை வலுவூட்டுவதும் உள்ளடங்குகின்றது: விழிப்புணர்வுப் பயிற்சிகளை நடத்துதல், பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகளை பாதுகாப்புச் சேவைகளுடன் இணைத்தல், திருமண பந்தத்திற்கு வெளியே பிறந்த குழந்தைகளுக்காக அல்லது விதவைகளுக்குப் பிறந்த குழந்தைகளுக்காகப் பிறப்புச் சான்றிதழ்களைப் பெறுதல், பெண்களின் அரசியல் பங்கேற்புத் தொடர்பாகப் பயிற்சிகளை நடத்தல், மாகாண சபைச் செயற்பாடுகளில் ஈடுபடும் பெண்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல்; பகுதியான அளவில் முறைசார்ந்ததாக இருக்கும் துறைகளில் தொழில் புரிகின்ற, பாலியல் தொழில் போன்ற தடைசெய்யப்பட்டுள் தொழில் புரிகின்ற பெண்களின் உரிமைகளுக்காகப் போராடுவதற்காகப் பெண்களை இயலுமாக்கல்; காணமல் போனவர்களின் குடும்பங்களுக்கும் யுத்தத்தினாலும் இன வன்முறையினாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் குரல்களை எழுப்புதல் ; பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை அகற்றிப் பரிகாரம் வழங்கல்; உணவுப் பாதுகாப்புடன் தொடர்புற்ற பாதிப்புறுநிலையினை அகற்றி வருமானத்தின் மீதான கட்டுப்பாடு மற்றும் அணுகலை வழங்கல்; பாலின சிறுபான்மையினரான பெண்களுக்கான சமத்துவத்திற்காகப் போராடுதல் மற்றும் அவர்களின் சமுதாயங்களினுள் சட்ட அமுலாக்கத்தினால் மேற்கொள்ளப்படும் நீதிக்குப் புறம்பான கைதுகளுக்கு எதிராகச் செயற்படல்.

கூட்டுக் குரல் எனும் எண்ணக்கரு பெண்களின் குரல்களை ஓங்கச்செய்வதில் ஒரு பிரதான கூறாக உருவாகியுள்ளது. பெண்களுக்குக் கூட்டொருமையினை வழங்குவதற்காக மாத்திரமன்றிக் கூட்டுக் குரலுக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவும் குழுக்களையும் மன்றங்களையும் உருவாக்குவதை மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் பலவும் வலியுறுத்தியுள்ளன. பெண்களை அதிகார அமைப்புக்களுடனும் சேவை வழங்குனர்களுடனும் இணைப்பதற்கான ஓர் உபாயமார்க்கமாகவே வலையமைப்புருவாக்கம் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதன் போது அடிமட்டத்தில் இயங்கும் பெண்களின் குரல்கள் செவிமடுக்கப்படுவதற்கான உயர் சாத்தியம் காணப்படுகின்றது. பெண்களின் அரசியல் பங்கேற்பும் பெண்களின் குரல்களை ஓங்கச் செய்வதில் இன்றியமையாததாகப் புலனுணரப்படுகின்றது. ஏனெனில், பெண்கள் அவர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் வெளிப்படுத்துவதற்கு அவசியமான பிரதிநிதித்துவத்தினையும் செயலாண்மையினையும் அது உருவாக்கும்.

பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்ட பங்காளர்களைப் பொறுத்த அளவில், வலுவூட்டல் என்பது பெண்கள் அவர்களின் சொந்த வாழ்க்கையினை அவர்களின் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்பக் கட்டுப்படுத்துவதற்கும் அதேவேளை அவர்களின் திறன்களை அதிகரித்து, அவர்களின் சுய உளவியல் விருத்தியினை உருவாக்கி, அவர்களின் தன்மானத்தினை விருத்தி செய்து, இறுதியில் தன்னம்பிக்கையினை உருவாக்குவதற்கும் அவர்களுக்கு இருக்கின்ற ஒரு சக்தியாகக் கருதப்படுகின்றது. தனிநபர்கள் அல்லது சமுதாயங்கள் வலுவூட்டப்படுவதற்குப் புறத் தரப்புக்கள் உதவக்கூடியதாக இருக்கும் அதேவேளை, ஒரு தனிநபர் தன்னைத் தானே தனியாக வலுவூட்டக்கூடியவராகவும் இருக்கின்றார்.

வலுவூட்டல் என்பது வெறுமனே ஒரு செயன்முறையாக விபரிக்கப்படவில்லை. ஆனால், வீடு, வேலைத்தளம் மற்றும் சமூகம் உள்ளிட்ட வாழ்வின் சகல பரப்புக்களினதும் முடிவான விளைவாகக் காணப்படுகின்றது. அறிவு, திறன்கள், மனித வளங்கள் மற்றும பொருள் வளங்கள், வலையமைப்புக்கள், கொள்கைகள் மற்றும் கருவிகள் என்பனவும் வாய்ப்புக்களும் அனுபவங்களும் வலுப்படுத்தலுக்கு இன்றியமையாத காரணிகளாக உள்ளதுடன் இந்தக் கருவிகள் இல்லாதிருப்பது பொதுவாக 'அதிகாரமின்மைக்கு' இட்டுச்செல்கின்றது என கருதப்படுகின்றது. மகளிர் உரிமைகள் அமைப்புக்களினால் அடையாளம் காணப்பட்ட இலக்குக் குழுக்கள், மேற்குறிப்பிட்ட எவ்விதமான காரணிகளும் அற்றவர்களாக இருக்கும் பெண்களையே பொதுவாக உள்ளடக்குகின்றன, எனவே, இவை அவர்களின் செயற்றிட்டங்களில் இணைக்க முயற்சிக்கின்ற இடைவெளியினையே எடுத்துக் காட்டுகின்றது.

பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டத்தினால் தாம் வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தங்களின் சில செயற்றிட்டங்களின் பயனாளர்கள் தாமே இப்போது வளவாளர்களாக மாறியுள்ளதாகவும் புதிய தலைமுறையினர் வன்முறை மற்றும் பாகுபாடு மிக்க சூழ்நிலைகளைக் கையாண்டு தமக்குத் தேவையான உதவிகளைப் பெறுவதற்காக அவர்களை வலுவூட்டி வருவதாகவும் பங்காளர்கள் கூறுகின்றனர்.

மகளிர் உரிமைகள் அமைப்புக்களைப் பொறுத்த அளவில், விளிம்புநிலையாக்கம் மற்றும் பாகுபாட்டினை அடையாளம் காண்பது என்பன வலுவூட்டலையும் பால்நிலைச் சமத்துவத்தினையும் உறுதிப்படுத்துவதற்கு பெண்ணிய அணுகுமுறைகளை அடையாளம் கண்டு அங்கீகரிப்பதற்கு இட்டுச்செல்கின்றது. பெண்களின் விளிம்புநிலையாக்கம் மற்றும் அவர்களுக்குக் காட்டப்படும் பாகுபாடு என்பன, பெண்களால் வெவ்வேறு சூழ்நிலைகளில் (இனம், மதம், பொருளாதார அந்தஸ்து, வதிவிடம், பாலியல் நாட்டம், தொழில், மற்றும் ஏனைய பல காரணிகளால்) வெவ்வேறு விதமாக எதிர்நோக்கப்படும் பல் பரிமாணமிக்க ஒரு பிரச்சினை என பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்ட பங்காளர்களினால் புரிந்துகொள்ளப்படுகின்றது. இந்த அனுபவங்கள் பெண்களுக்குத் தனிப்பட்டவையாக இருந்தாலும், பொதுவாகச் சமுதாயத்தில் பால்நிலைச் சமத்துவமின்மையை உருவாக்கி, குறிப்பாகப் பல்வேறு குழுக்கள் மற்றும் சமுதாயங்கள் ஓரம்கட்டப்படுவதற்கு இது இட்டுச்செல்கின்றது எனப் பங்காளர்கள் நம்புகின்றனர்.

மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் நிறைவேற்றும் பணிகளில், சேவைகளுக்கான அணுகல் இன்றி வீட்டு வன்முறையினை அனுபவிக்கும் பெண்கள் விளிம்புநிலைக்குத்

தள்ளப்படுவதை அவை பார்க்கின்றன, பெண் தலைமைக் குடும்பங்கள் மற்றும் அங்கவீனமான பெண்கள் அரசின் சேவை வழங்கலில் முன்னுரிமை பெறாமையினைப் பார்க்கின்றன, பெருந்தோட்டங்களில் வாழும் மற்றும் வேலை செய்யும் பெண்களுக்கு அரசியல் கட்சிகளிலும் தொழிற்சங்கங்களிலும் இடமளிக்கப்படாது அவர்களுக்கு வீடமைப்பும் காணி உரிமைகளும் மறுக்கப்படுகின்றமையினைப் பார்க்கின்றன, அடிமட்டச் சமுதாயத்தினைச் சேர்ந்த பெண்கள் அரசியல் செயன்முறைகளில் உள்ளடக்கப்படாமையினைப் பார்க்கின்றன, கிராமியப் பாடசாலைகளில் உள்ள மாணவிகள் விளையாட்டுக்களில் பங்குபற்ற அனுமதிக்கப்படாமையினைப் பார்க்கின்றன, அவர்கள் போதைப்பொருளுக்கும் மதுவுக்கும் அடிமையாவதைப் பார்க்கின்றன, சமுதாய நடவடிக்கைகளில் இருந்து விலக்கிவைக்கப்படுவதைப் பார்க்கின்றன, இயற்கை அனர்த்தங்களாலும் யுத்தத்தினாலும் இடம்பெயர்ந்த பெண்கள் கல்விக்கும் சமுதாயச் செயற்பாடுகளுக்கும் அணுகல் கொண்டிராமையினைப் பார்க்கின்றன, பாலியல் தொழில் போன்ற தடைசெய்யப்பட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்கள் சமுதாயப் பாதுகாப்பின்றி ஏனைய பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதைப் பார்க்கின்றன. இவையெல்லாம் பெண்களின் ஒட்டுமொத்த வலுவிழப்பிற்கு, பங்களிப்பு வழங்குவதால், இதனைச் சகல பெண்களும் எதிர்நோக்கும் பிரச்சினையாகவே மகளிர் அமைப்புக்கள் நோக்குகின்றன.

பெண்களின் சமத்துவத்திற்காகப் பணியாற்றுவதற்காக இடையீடுகளை உருவாக்கி அவற்றினை அமுல்படுத்துகையில் பாகுபாட்டிற்கும் விளிம்புநிலையாக்கத்திற்கும் இடையில் இருக்கும் இந்த வித்தியாசத்தினைப் புரிந்துகொள்வதன் அவசியத்தினை மகளிர் அமைப்புக்கள் கோடிட்டுக்காட்டின. இந்தச் செயன்முறையானது, அதன் சாரத்தில், பெண்ணியம் சார்ந்ததாகும்.

### மகளிர் உரிமைகள் அமைப்புக்களுக்குப் பெண்ணியம் என்பது என்ன?

இலங்கைச் சூழமைவினுள்ளும் தெற்காசியச் சூழமைவினுள்ளும் பெண்ணியம் எனும் கருத்தியலை மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் திறனாய்வுடன் பகுப்பாய்வு செய்தன. இதன் போது இலங்கையில் பெண்ணிய இயக்கங்களின் நோக்கம் ஆராயப்பட்டதுடன் நடைமுறை ரீதியான பால்நிலைத் தேவைகளுக்கும் உபாயமார்க்க ரீதியான பால்நிலைத் தேவைகளுக்கும் இடையிலான வித்தியாசங்கள், பால்நிலை வகிபாத்திரங்களின் தாக்கங்கள் மற்றும் அதிகார உறவுகளின் தாக்கங்கள், மற்றும் பெண்களுக்காக உறுதியான குரலை உருவாக்கல், அவர்களின் செயலாண்மையினை வலுப்படுத்தி அதன் மூலம் அவர்களின் உரிமைகளைப் பூரணமாக அடைந்துகொள்ளல், அவர்களின் வலுவூட்டல் மற்றும் இறுதியில் இலங்கையில் பால்நிலைச் சமத்துவம் ஆகியன கலந்துரையாடப்பட்டன.

பால்நிலை வகிபாத்திரங்கள், பொறுப்புக்கள் மற்றும் அதிகார உறவுகள் சார்ந்த பக்கச்சார்புகளுடன் தொடர்புடைய மற்றும் குடும்பம், மதம், அரசியல்வாதிகள், மற்றும் சமுதாயத் தலைவர்கள், மற்றும் போன்ற புறக் காரணிகளாலும் சக்திகளாலும் பால்நிலை வகிபாத்திரங்கள் நிலைக்கச் செய்யப்படுதலுடன் தொடர்புடைய மற்றும் ஆணாதிக்கத்தினைப் நிலைநாட்டும் அதிகார உறவுகளின ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதில் பற்றிப்பிடிக்கின்ற அதிகார உறவுகளின் தொடர்புடைய உண்முகநோக்கினைச் சம்பந்தப்படுத்தும் சில முக்கியமான சிந்தனைச் செயன்முறைகளை மகளிர் அமைப்புக்கள் கலந்துரையாடுகின்றன. அரசியலமைப்புச் சமத்துவம் மற்றும் உறுதிப்படுத்தும் செயற்பாட்டு வாசகங்கள், கடந்த கால மற்றும் தற்காலப் பெண்ணிய இயக்கங்களின் அனுபவங்கள், சீடோ மற்றும் பீஜிங் பிரகடனம், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் 5 ஆம் இலக்கு, 125 வது யுஎன்எஸ்சி தீர்மானம், மற்றும் பால்நிலைச் சமத்துவம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய தேசிய கொள்கையினால் வழிநடத்தப்படும் தேசிய கொள்கைகள் போன்ற வழிகாட்டல் கோட்பாடுகளாகப் பயன்படுத்தப்படுவதற்காக இலங்கையில் கிடைக்கும் பெண்ணியக் கருவிகள் மற்றும் சாதனங்களைக் கலந்துரையாடல் உறுதியான அடிப்படையாகக் கொண்டிருந்தது.

தங்களின் இடையீடுகள் நலனோம்புகையினையும் பாதுகாப்பினையும் வழங்குகின்றன என்பதை அடையாளங்கண்ட மகளிர் அமைப்புக்கள் தமது சொந்தப் பணிகளையே கேள்விக்குட்படுத்துகின்றன. WVL-SL இனால் உதவி வழங்கப்பட்ட இடையீடுகள்

சில குறிப்பிட்ட அமைப்புக்களைப் பொறுத்த அளவில், பெண்கள் அவர்களின் இலட்சியங்களைப் பூர்த்திசெய்து நிறுவன ரீதியான களங்கங்களை உடைப்பதற்கு அவர்களை இயலுமாக்கிப் பெண்களின் மத்தியில் கூட்டொருமையினைப் போஷிப்பதைச் சுற்றியே வலுவூட்டல் சுழல்கின்றது. ஏனையோர் வலுவூட்டலைப் பெண்களுக்கான ஓர் அடைவாகவும் அவர்களின் வாழ்வின் சகல அம்சங்களையும் வலுப்படுத்தும் ஒரு செயன்முறையாகவும் நோக்கினர். சில நிறுவனங்கள் வலுவூட்டலை, பெண்கள் அவர்களின் சுய உளவியல் விருத்திக்கு இருக்கும் தடைகளைத் தாண்டுவதற்கான ஒன்றாகப் புலனுணர்ந்தன. மேலேயுள்ள புகைப்படம், மகளிர் உரிமைகள் அமைப்புக்களுக்கு வலுவூட்டல் என்பது எதைக் குறிக்கின்றது என்பதைக் காட்டும் அவற்றின் கட்புல வியாக்கியானங்களின் சேகரமாக அமைகின்றது.

வாழ்வாதார உதவி, கடனுக்கான அணுகல் மற்றும் வருமானப் பெருக்க வாய்ப்புக்கள், தொழிற்பயிற்சி மற்றும் சந்தைக்கான வாய்ப்புக்கள், நிதி முகாமைத்துவம் பற்றிய அறிவு, பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய விழிப்புணர்வு மற்றும் சேவைகளுக்கான மற்றும் நீதிப் பொறிமுறைகளுக்கான அணுகல், மற்றும் நலனோம்புகை நலன்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு முறைமைகள் போன்ற பெண்களுக்கான பொருளாதார ஸ்திரப்படுத்தல் தொடர்பானவையாகவே இருந்தன.

மகளிர் அமைப்புக்கள் வழங்கும் இடையீடுகள், அவை நீதி முறைமையின், சேவைகளின், உணவுப் பாதுகாப்பின், மருத்துவ மற்றும் உளசமூக உதவியின் பாதுகாப்பாகவோ மற்றும் தொழில்வாய்ப்புப் பாதுகாப்பாகவோ, மகளிர் அமைப்புக்களைத் தாமே குழுக்களாகப் பாதுகாத்தலாகவோ என எவ்வகையான பாதுகாப்பாக இருந்தாலும் அந்த இடையீடுகள் பாதுகாப்பினை வழங்குகின்றன என்பதில் மகளிர் அமைப்புக்கள் உறுதியாக உள்ளன.

நலனோம்புகை மற்றும் பாதுகாப்பு இடையீடுகள், பால்நிலை சமத்துவமின்மை, பாதுகாப்புவாதம், மற்றும் ஆணாதிக்க அனுசரணை ஆகியவற்றின் மாறாநிலையான நிலைகளுக்குள் பெண்களைச் சிக்கவைக்குமா என மகளிர் அமைப்புக்கள் வினாத் தொடுக்கின்றன. இந்த அணுகுமுறைகள் உள்ளார்ந்த அடிப்படையில் பெண்ணியமானவையாக இல்லாதிருக்கலாம் என்பதை அவை ஒன்றுசேர்ந்து ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, பெண்களை வலுப்படுத்தல், தேவைகளை அடைவதைப் போஷித்தல், பெண்களின் குரல்களை வலுப்படுத்தல், இறுதியில் இலங்கையில் பால்நிலைச் சமத்துவமின்மையினைக் குறைத்தல் ஆகியவற்றினை நோக்கிய முக்கிய படிகளாக அவை விளங்குகின்றன.

பெண்களின் கூட்டு பலத்தின் காரணமாக அவர்கள் சமுதாயத்தில் வலுவூட்டப்பட்டுள்ளனர்; அவர்களை விளிம்புநிலையாக்கி, விலக்கிவைத்து, இறுதியில் பாகுபாட்டுக்கு இட்டுச்செல்லும் பிரச்சினைகளைச் சிறந்த முறையில் அடையாளம் காண்கின்றனர், அவர்களின் பல்வகைமைமிக்க பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்கான அணுகலைக் கொண்டுள்ளனர் மற்றும் தீர்வுகள் மீது கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ளனர்; அதிகாரமிக்க நிறுவனங்களில் (சமய, அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் குடும்பங்கள்) தலைமைத்துவப் பதவிகளை எடுத்து பாகுபாடுகளுக்குச் சவால்விடுப்பதற்கான அதிகரித்த சக்தியினைக் கொண்டுள்ளனர், அதிகரித்த நிதி வள உருவாக்கம் மற்றும் மனித வள உருவாக்கம் மூலம் இடையீடுகளை நிலைபேறாக்குவதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளனர், சமுதாயத்தில் இருந்து கௌரவத்தினையும் அந்தஸ்தினையும் இவர்கள் பெறும் வகையில் சமுதாயத்தில் இருந்து இவர்கள் பெறும் மதிப்பில், தன்மானத்தில், தன்னம்பிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்டத்துடன் கடந்த நான்கு வருடங்களாகப் பங்காண்மை அமைத்த மகளிர் உரிமைகள் அமைப்புக்கள், தாம் மகளிர்

உரிமைகளை வலுப்படுத்தியுள்ளதாக நம்பிக்கை கொண்டுள்ளனர். அவர்கள் இதற்கான தெளிவான மற்றும் புலப்படத்தக்க உதாரணங்களை வழங்குகின்றனர் -பெண்களின் குரல் அதிகரித்துள்ளமை, அவர்களின் சொந்த நிறுவனங்களுக்கு வெளியே அரசியல் உள்ளிட்ட பரப்புக்களில் தலைமைத்துவ வகிபாத்திரங்களில் பெண்களின் பங்கேற்பு, பெண்களின் உரிமைகள் மற்றும் சமத்துவத்தினை மேம்படுத்துவதற்கு ஆண்கள் உள்ளடங்கும் மன்றங்களையும் வலையமைப்புக்களையும் தாபித்தல், ஆணாதிக்க நிறுவனங்களில் பெண்களின் அதிகரித்த தீர்மானம் வகுத்தல் சக்தி, பெண்களுக்கு எதிரான வன்முறையினை மனித உரிமைகள் மீறலாக அடையாளங்கண்டு அதற்கு பதிற்செயற்பாடாற்றும் முறைமைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் பெண்களுக்கு எதிரான வன்முறையினைத் தடுத்தல். இதனால், தங்கள் பணிகள் சமத்துவமின்மைகளைக் குறைத்துள்ளன எனப் பங்காளர் அமைப்புக்கள் உறுதியாக நம்புகின்றன. வீட்டில் காணப்படும் ஊழியப் பிரிப்பு, பெண்களின் வேலை மற்றும் பெண்களின் இடம் என மாத்திரம் அடையாளம் காணப்பட்ட செயற்பாடுகளில் ஆண்களின் ஒத்துழைப்பும் உதவியும், பாதகமான சமூக நியமங்களால் தூண்டப்படும் பால்நிலைப் பக்கச்சார்புகளில் குறைவு ஏற்பட்டுள்ளமை, சமூகத்தின் பல பரப்புக்களில் சமமான வாய்ப்புக்களில் அதிகரிப்பு, அதிகமான பால்நிலைக் கூருணர்வுமிக்க சேவைகள், பெண்கள் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் ஆண்களைக் குறைந்த அளவில் சார்ந்திருப்பவர்களாக மாறுதல் போன்றவற்றின் மூலம் இது எடுத்து விளக்கப்படுகின்றது.

மகளிர் உரிமைகள் அமைப்புக்கள் எவற்றினைச் செய்கின்றனவோ மற்றும் அவற்றினை எவ்வாறு செய்கின்றனவோ அவை உண்மையில் பெண்ணியமானவை என முடிவாக நம்புகின்றன. அவை குரல்களையும் செயலாண்மையினையும் வலுவூட்டலையும் இயலுமாக்குதல் பற்றியும் பெண்களின் சமத்துவம் மற்றும் உரிமைகளின் அங்கீகாரம் பற்றியும் பல பரப்புக்களில் காணப்படும் ஆணாதிக்கத்தினை அகற்றுவதற்கு நம்பிக்கையுடன் நகர்வது பற்றியும் பேசுகின்றன.

இலங்கையில் பெண்களின் சமத்துவத்திற்காகப் பெண்ணிய அணுகுமுறையினைப் பயன்படுத்தும் பெண்ணிய அமைப்புக்கள் என பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் -இலங்கை செயற்றிட்ட பங்காளர்கள் தம்மைப் பெருமையுடன் அழைக்கின்றனர்.

In partnership with Canada

The Asia Foundation

**செயற்றிட்டத்தைப் பற்றி:** பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம், இலங்கை செயற்றிட்டமானது கனேடிய அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்டு ஆசிய மன்றத்தின் இலங்கை அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இச்செயற்றிட்டமானது, பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுப்படுத்துவதற்காகவும், பெண்கள் மற்றும் சிறுமிகளினது உரிமைகளையும் பாதுகாப்பினையும் மேம்படுத்துவதற்காகவும் பால்நிலை சமத்துவத்தை அடைவதற்கும் எதிர்பார்க்கின்ற உள்ளூர் பெண்தலைமைத்துவமுடைய மகளிர் உரிமை நிறுவனங்கள் மற்றும் இயக்கங்களின் இயலுமை விருத்தி செய்தலையும் அவர்களின் செயற்பாடுகளுக்கு உதவி செய்தலையும் நோக்கமாகக் கொண்டது.

**ஆவணத்தைப்பற்றி:** பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம், இலங்கை செயற்றிட்டமானது அதன் செயலமர்வுகள், பயிற்சிகள் மற்றும் நிகழ்ச்சிகளை இந்த ஆவணத்தினைப் போன்றே 'ஆவண சுருக்கங்களாக்கி' தொடராக ஆவணப்படுத்துகிறது. இவ்வாவணங்களானது நிகழ்ச்சியின் உள்ளடக்கத்தை சுருக்கமாக குறிப்பாக்குவதோடு, முக்கிய கலந்துரையாடல்களை அவதானப்படுத்தி அடுத்த நடவடிக்கைகளையும் குறிக்கிறது. அத்துடன் செயற்றிட்டத்தின் முழுமையான நோக்கத்திற்கும் இலக்கிற்கும் ஆற்றிய பங்களிப்பினையும் முக்கியத்துவப்படுத்துகிறது. மேலும் செயற்றிட்டத்தின் வலையமைப்பு மற்றும் பங்காளர்களான மகளிர் உரிமை நிறுவனங்களிலுள்ள பெண்களின் குரல்களையும் உள்ளடக்குகிறது.

**பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கை**
ஆசிய மன்றம்
30/1இ பகத்தலே வீதிஇ கொழும்பு 3.
தொலைபேசி: +94 11 2058701 Email: wvl@asiafoundation.org